கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

# ஞான ஒளி

ඥාන ඔලි

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05





வாசகர் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழா மகிழ்ச்சி,
உங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் என்றும் இருக்க என் உளங்கனிந்த
நல் வாழ்த்துக்கள் – இறையாசீருடன் ஆசிரியர்


22.12.2013 - (22 மார்கழி, 2013 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 04, கதிர் - 77 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : GO / GD / 53 / NEWS / 2013


# கிறிஸ்து பிறப்பு நினைவா? நிகழ்வா?



## இன்னொரு கிறிஸ்துவாய்...

உறவுகள் உதிர்ந்து போகும்
இவ்வுலகில்
புது உறவாய் நீ வந்தாய்.

என் தெய்வமே! எதற்காக, ஏனின்று
எங்களிடையே நீ?

மதமதை துறந்து
மனித நேயமதை மறந்து
சுயநல ஓட்டுக்குள் சுருண்டு
கொள்ளும்
நத்தைகள் நம்மிடையேயா நீ?

உன்னை நான் என்றுமே
தேடாதிருக்க
இன்று நீர் என்னை ஏன்
தேடி வந்தீர் இறைமகனாவே?

இருள் சூழ்ந்த என் வாழ்வில்
என்னை ஏன் குறுக்கிட்டாய்
ஒளி தீபமே?

இன்னொரு கிறிஸ்துவாய் மாறிட
இறை மகனே என்னை நீ
அழைக்கின்றாயா?

உன் ஒளியைக் கண்ட என் வாழ்வும்
ரேடியம் போல உன்னை என்னில்
பிரதிபலித்து இங்கே பிறருக்கு
ஒளியாய் மாறமாட்டேனா?

ஆக்கம் : எஸ். ஜேசுதாஸ்,
CMF 'கிளாரட் நிவாஸ்'
கண்டி


கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
அன்பும்,
அமைதியும், பகிர்வும்
நிறைந்த இனிய
நத்தார் வாழ்த்துக்கள்

கொழும்பு உயர் மறைமாவட்ட
கத்தோலிக்க அச்சகத்தின்
இயக்குனர், ஆசிரியர்,
பணிபுரியும் ஊழியர்கள்


உலகெங்குமுள அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்




# குடிபெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கான

## இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்ற தேசிய ஆணைக்குழுத் தலைவரின் செய்தி



மேதகு ஆயர் ஹெரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகை
தலைவர்

குடிபெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கான உலக தினம் 2014ஆம் ஆண்டு தை மாதம் 19ஆம் திகதி சிறப்பிக்கப்பட்டாலும் இலங்கையில் மார்கழி மாதம் 18ஆம் திகதி சிறப்பிக்கப்படுகிறது. திருத்தந்தை இத்தினத்திற்கான தொனிப்பொருளாக "சிறந்ததொரு உலகத்தை நோக்கிய பயணத்தில் குடிபெயர்ந்தோர் மற்றும் அகதிகள்" என்பதை தெரிந்தெடுத்துள்ளார் என்பதையும் ஞாபகப்படுத்துகின்றேன்.



சனத்தொகை மதிப்பீட்டு திணைக்களம் 2012இல் வெளியிட்ட 30 வருடங்களின் பின்னரான முழு இலங்கையிலும் மேற்கொண்ட சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கையின் படி, குடியகல்வு அல்லது குடிபெயர்பு என்றால் நாட்டிற்குள்ளேயோ அல்லது நாடுகளுக்கிடையிலோ மக்களின் இடப்பெயர்வாகும்.

அதன்படி, நகரங்களை நோக்கிய இடப்பெயர்வு உள்நாட்டிற்குள்ளும் இடம்பெறுகிறது. மேலும் சர்வதேச குடியகல்வு மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குமானதாக அமைகிறது. தொழில் வாய்ப்புகளுக்காக, கல்வி வாய்ப்புக்களுக்காக குடும்பங்களுடன் அங்கேயே குடியிருப்பதற்காக, மீள் குடியிருப்பிற்காக என்று பல காரணங்கள் இதற்கு ஏதுவாக அமைகின்றன.

இக்காரணங்களில் வேலைவாய்ப்பு மற்றும் மீள்குடியிருப்பு என்பவற்றை விசேட கவனத்துடன் நோக்குவது அவசியமாகும். கிட்டத்தட்ட 30 வீதமான எமது மக்கள் நல்வாழ்வுக்கான வசதிகளை எதிர்பார்த்து வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர் என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

குடிபெயர்வு என்பது ஒரு வரலாற்று உண்மை. இரண்டு உலக மகா யுத்தங்களின் பின்னர் காலனித்துவ நாடுகளுக்கான அரசியல் சுதந்திரம் வழங்கப்பட்டவுடன் இக்குடியகல்வு பெருவாரியாக இடம்பெற்றதை நாம் காண்கின்றோம்.

1950ஆம் ஆண்டு தொடங்கி கீழைத்தேய நாடுகளைச் சேர்ந்தோர் உயர் கல்விக்காக மேலைத்தேய நாடுகளை நாடி அங்கேயே தங்கியதையும் நாம் அவதானிக்கின்றோம். அதேவேளை சோவியத் ரசியாவின் கீழ் இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, மற்றும் மேற்கு ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர். 1970களிலிருந்து இலங்கையிலிருந்தும் இத்தாலி மற்றும் மத்திய கிழக்கிற்கு ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்ததை மறக்க முடியாது. அதேபோல இன்று கிறிஸ்மஸ் தீவுகளினூடாக அவுஸ்திரேலியாவை நோக்கி படகுகளில் மக்கள்



பயங்கரமான பயணத்தை மேற்கொள்ளும் பரிதாபமான நிலையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மத்திய கிழக்கிற்கு பெண்கள் குடிபெயர்வது எமது நாட்டிற்கு பெருவாரியான வெளிநாட்டு வருவாயை ஈட்டித்தரும் முக்கிய காரணியாக அமைகிறது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# எமது சமூகத்தில் பல்வகைத் தன்மை ஏற்றுக்கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்

தற்போதுள்ள நாட்டு நிலையைக் குறித்து அது தொடர்பாக கத்தோலிக்க ஆயர் பேரவை பொரள்ளை பெல்கம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஆயர் மன்ற செயலகத்தில் (CBCDL), ஆயர் பேரவையின் தலைவர், கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் 11.12.2013 அன்று சுற்றுமடலொன்று வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் ஏனைய மறைமாவட்ட ஆயர்களும், துறவற சபையைச் சார்ந்த மாநில தலைவர்களும் பங்குபற்றியிருந்தனர். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை காலத்துக்கு காலம் இவ்வகையான சுற்று மடலை வெளியிட்டு வருகின்றது. உதாரணமாக 1984ஆம் ஆண்டு சுற்றுமடல் ஒன்றை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. 11.12.2013 வெளியிட்ட ஆயர் பேரவையின் சுற்றுமடலின் விரிவாக்கம் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

## வாழ்த்துகிறோம்



கொழும்பு உயர் மறைமாவட்ட முன்னாள் பேராயர் அதிமேதகு நிக்லஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகை தமது குருத்துவ திருநிலைப்படுத்தலின் நினைவு நாளைக் (20.12.2013) கொண்டாடுகின்றார். இவரை ஞான ஒளி செபத்தின் ஊடாக வாழ்த்துகின்றது.





## அறிவித்தல் - கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க பாடசாலைகளுக்கான மாற்றங்கள்

**புனித சூசையப்பர் கல்லூரி மருதானை**
அதிபர் - அருட்பணி. ட்ரவிஸ் கப்ரியேல் அடிகள்
உப அதிபர் - அருட்பணி. என்டன் ரஞ்சித் அடிகள்

**புனித பேதுரு கல்லூரி – பம்பலப்பிட்டிய**
அதிபர் - அருட்பணி. ட்ரவர் மார்ட்டின் அடிகள்
உப அதிபர் - அருட்பணி. வின்சன்ட் ஆஷ்லி அடிகள்

**புனித செபஸ்தியார் கல்லூரி மொரட்டுவை**
அதிபர் - அருட்பணி. கெமுனு டயஸ் அடிகள்
உப அதிபர் - அருட்பணி. தயா தர்ஷன அடிகள்

**லொயலா கல்லூரி – நீர்கொழும்பு**
அதிபர் - அருட்பணி. ரஞ்சித் அந்திராடி அடிகள்
உப அதிபர் - அருட்பணி. ருவன் தேஷப்பிரிய அடிகள்

**புனித தோமையார் கல்லூரி – சர்வதேச பாடசாலை**
அதிபர் - அருட்பணி. கென்னடி பெரேரா அடிகள்

**புனித சூசையப்பர் கல்லூரி – கிளை கல்லூரி, வத்தளை**
இயக்குனர் - அருட்பணி. சமிந்த வணிகசேன அடிகள்

**புனித சூசையப்பர் கல்லூரி – கிளை கல்லூரி, நீர்கொழும்பு**
இயக்குனர் - அருட்பணி. சுதத் குணதிலக்க அடிகள்

**புனித பேதுரு கல்லூரி – கிளைக்கல்லூரி உடுகம்பல**
அருட்பணி. ரோஹித்த ரொட்றிகோ அடிகள்

**புனித யூட் கல்லூரி – நீர்கொழும்பு**
முன்பிருந்த அருட்தந்தையே பணியில் இருப்பார்

**பங்குத்தந்தையர்களுக்கான புதிய நியமனங்கள்**

**புனித மரியாள் ஆலயம் தெஹிவளை**
அருட்பணி. பொனி பெணான்டோ புள்ளே அடிகள்

**புனித அன்றூஸ் ஆலயம் முகத்துவாரம்**
அருட்பணி. மார்க்கஸ் பேர்டினண்டஸ் அடிகள்

**புனித செபமாலை அன்னை ஆலயம், தெஹியகாத்த**
தற்காலிகமாக - அருட்பணி. ஃபீரிலி முத்துகுடாராச்சி

**விடுமுறை**
அருட்பணி. சில்வெஸ்டர் ரணசிங்க அடிகள்
அருட்பணி. ராஜ் பெற்றிக் சில்வா அடிகள்

ஞான ஒளி GNANA OLI ඥාන ඔළි

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
22 மார்கழி மாதம், 2013 ஞாயிற்றுக்கிழமை.

## இஸ்ராயேலருக்கு கானான் நாடு வாக்களிக்கப்பட்டது ஒரு கொடை. அதுபோல புதிய இஸ்ராயேலராகிய நமக்கு கடவுளின் மகனின் பிறப்பு ஒரு கொடை.

வருடந்தோறும் நாம் நத்தாரை கொண்டாடி மகிழ்கி-ன்றோம். நத்தார் என்றால் என்ன? புத்தாடை அணிவதும், பட்டாசு கொழுத்தி மகிழ்வதும், வீட்டுக்கு வர்ணம் பூசி வீட்டை அலங்கரிப்பதும், சொந்த பந்தங்களை அழைத்து விருந்தளிப்பதும் இவைதானா நத்தார். இவற்றோடு எல்லாம் முடிந்து விடுமா? இதைத்தான் நாம் காலங்காலமாக செய்து வருகிறோம். நத்தார் என்பது ***"இயேசுக்கிறிஸ்து அடிமை நிலை ஏற்று இவ்வுலகில் பிறந்தது தான் நத்தார். படைப்பாளி படைப்புக்களுடன் தொடர்பை ஏற்படுத்த வருவதுதான் நத்தார் ஆகும்".***

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்" (பிலி 2:6-7) இறைமகன் இயேசு தன்னையே அடிமையாக்கி இம்மண்ணில் உதித்தார். இறைத்தன்மையிலிருந்து வெறுமையாகி அடிமை நிலை ஏற்றார். எனவே நாமும் இம்மண்ணில் இறைமகன் இயேசு பிறக்கும்போது எமது உள்ளம் எவற்றுக்கெல்லாம் அடிமையாகி இருக்கின்றது என சிந்தித்து பார்த்து விடுதலை வாழ்வை பெற்றிடுவோம்.

கடவுள் மனிதனானது மனித குலத்திற்கு கடவுள் தந்த பெரிய பரிசு, இஸ்ராயேலருக்கு கானான் நாடு வாக்களிக்கப்பட்டது ஒரு கொடை. அதுபோல புதிய இஸ்ராயேலராகிய நமக்கு கடவுளின் மகனின் பிறப்பு ஒரு கொடை. இந்த கடவுளின் மனுவுருவாதலின் சிறப்புக் கண்ணோட்டம், காலங்களுக்கு அப்பாற்பட்டவர் காலங்களுக்கு உட்பட்டவரானார். கற்புலனாகாதவர் கற்புலனானார். கண்கள் காணக் கூடாதவர், கண்களால் காணக்கூடியவரானார். மனித தேவைகளைக் கடைந்தவர் பாவம் தவிர மற்ற அனைத்திலும் நம்மைப்போல் ஆனார் என்பதை மனுவருவாதல் எடுத்துரைக்கின்றது. மனுவுருவானது கடவுளின் புதிய ஆட்சிக்கு வித்திடுகின்றது. நிலையான ஆட்சிக்கு மூலைக்கல்லாக அமைகிறது. முடிவுறா ஆட்சியை தொடங்கி வைக்கிறது. புதிய விண்ணகமும், புதிய மண்ணகமும் தோன்றுவதற்கு அடித்தளம் இடுகின்றது. இறை அருள் துளிர்விடச் செய்கின்றது. நல்மனத்தவரின் உள்ள அமைதிக்கு அடிகோலுகின்றது. மனித வாழ்வுக்கு புதிய அர்த்தம் கொடுக்கின்றது. புதிய ஆதாமின் வழிவரும் மீட்புக்கு காரணமாக அமைகிறது. புதிய ஏற்பாட்டையும் புதிய உடன்படிக்கையையும் ஏற்படுத்தி நமக்கு தந்திருக்கின்றார். அனாதைகளுக்கும் சிறியோருக்கும் வறியோருக்கும் முகவரி கொடுத்திருக்கிறது. துன்பத்திற்கும் துயரத்திற்கும் பொருள் உண்டு என நம்பிக்கை அளித்திருக்கின்றது. இதே நம்பிக்கையோடு நமது நிலையை சற்று சிந்தித்துப் பார்த்து அனைவருக்கும் நாமும் நம்பிக்கை நட்சத்திரமாக பிரகாசிப்போம். இயேசு என்னும் மாமனிதனுடன் புது வாழ்வில், புது உறவில் சங்கமிப்போம். அப்போதுதான் உண்மையான பொருள் உள்ள நத்தாரை நாம் கொண்டாடி மகிழலாம்.

வாசகர்கள் அனைவருக்கும் ஞான ஒளி சார்பாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழாவின் மகிழ்ச்சி நிறைவாக தங்கிட வாழ்த்தி நிற்கின்றேன்.

இறையாசீருடன்
ஆசிரியர்

# கிறிஸ்மஸ்




அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம்

எமது இன்றைய வாழ்வு... கனத்து நிற்கும் மனங்களும், கவலை தோய்ந்த முகங்களும், கண்ணீர் மல்கும் கண்களும், கரைந்துருக்கும் நோய்களும், அனைத்திற்கும் மேலாக முகாம்களில் விடுதலைக்காக ஏங்கி எழும் விம்மல்களும், பெருமூச்சுக்களும்... இவற்றின் மத்தியிலும் நாம் எதிர்பார்த்திருக்கும் கிறிஸ்மஸ் தரும் செய்தி என்ன?

கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி என்பது வாழ்க்கையை மறந்து பாட்டுப்பாடுவதிலும், குடித்துக் கூத்தாடிக் கொண்டாடுவதிலும் அடங்குவதில்லை. குதூகலம் எல்லாம் கிறிஸ்மஸ் அல்ல. கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி வாழ்க்கையின் மகிழ்ச்சி. வாழ்வின் இறைவனைக் கண்டு கொள்வதனால் ஏற்படும் மகிழ்ச்சி. கிறிஸ்மஸ் ஒரு பயணம். ஒரு தொடர் நிகழ்ச்சி. மேற்குறிப்பிட்ட மனித அவலங்கள் மத்தியில் அர்ப்பணத்தோடு ஈடுபாடு கொண்டு உழைக்க, மனிதத்தை மீளக் கட்டியெழுப்ப இறைமகன் இயேசு விடுக்கும் உன்னத அழைப்பு. கிறிஸ்து பிறப்பின் சூழலைப் பார்த்தால்... அடிமைத்தனமும், விடிவே இல்லாதது போன்ற இருளான, அங்கலாய்ப்பும் நிறைந்த ஒன்று. உலகப் போக்குகளின் ஆதிக்கங்கள் தலைதூ-க்கி நின்ற நேரம். இன்றைய சூழல் எப்படியோ அதேபோன்றுதான் அன்றும். பின்வரும் விவிலிய நிகழ்வுகளை எடுத்து நோக்கி இன்று அவை நம்மிடம் வேண்டி நிற்கும் அழைப்பு, ஈடுபாடு என்னவென்று ஆராய்வோம்.

### நாசரேத்திலிருந்து பெத்லகெம்

இருளும் அடிமைத்தனத்தின் கொடூரமும் நிறைந்த நாட்களில்தான் நாசரேத்திலிருந்து பெத்லகேமிற்கு பயணம் தொடங்கியது. "நாசரேத்து" என்றால் எவ்வித நன்மையும் இங்கிருந்து ஏற்படாது என்று கருதப்பட்ட இடம். "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ" (யோவான் 1:46) "பெத்லகெம்" என்றால் அப்பத்தின் வீடு. வாழ்வும், சமாதானமும் தரும் இறைவனைத் தேடும் இடம் என்று பொருள். குழந்தைதான் ஒரேயோரு அடையாளம். அதாவது, மனித பலம் ஒன்றுமில்லை. இறை பலம் ஒன்றுதான் நமக்கு நம்பிக்கையும் சமாதானமும் தரும் என்று உணர்த்திய சூழல். எனவே, இங்கிருந்து ஏதாவது நன்மை ஏற்படக் கூடுமோ என்ற நாசரேத்தூர் என்னும் எமது மனித நிலையிலிருந்து ஆண்டவர் நமக்கு வாழ்வும், சமாதானமும் தருகின்றார் என்ற "பெத்தலேகெம்" எனும் நிலைக்கு நாம் பயணம் செய்யும் ஒவ்வொரு முறையும் எமது வாழ்வில் கிறிஸ்மஸ் நடைபெறுகின்றது.

### முதல் கிறிஸ்மஸ்

பாலனைக் கண்டு மகிழ்ச்சியை அனுபவித்த முதல் கிறிஸ்மஸ் கூட்டம் யாரென்றால், கன்னிப் பெண்ணாக இருந்து, கருத்தரித்து, தனது பிரசவத்தை வீதியோரத்தில் காணும் அவமானத்தை அனுபவித்த கன்னி மரியாவும் அவரது அங்கலாய்ப்புக்கள் அனைத்தையும் சுமந்து நின்ற அவருடைய கணவர் சூசையப்பரும் வானமே எங்கள் வீட்டுக்கூரை என்று வெட்ட வெளியில் கிடந்த ஏழை இடையர்களுமே. ஆம், தமது அன்றாட வாழ்க்கை நிலையை, அவலங்களை ஏற்றபொழுதுதான் அவர்களுக்கு அங்கே இயேசு பிறந்தார். மகிழ்வைக் கொடுத்தார். நமது அன்றாட அனுபவங்களை இறையனுபவமாக ஏற்கும்பொழுதான் நாமும் இறைவன் தரும் மகிழ்ச்சியை அனுபவிக்கின்றோம். நமது உள்ளத்தில் இயேசு பிறக்கின்றார். "கடவுள் நம்மோடு" இருக்கிறார். அர்த்தத்தைக் கொடுத்து வழி நடத்துகிறார்.

### கிறிஸ்மஸ் ஒரு பயணம்

எமது அன்றாட வாழ்விலே இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்து, அவரது வழிநடத்தலில் நிறைவையும் மகிழ்ச்சியையும் அனுபவித்து, அதைப் பிறருடன் பகிர்ந்து வாழ்வதே கிறிஸ்மஸின் அழைப்பு, கிறிஸ்மஸ் மகிழ்ச்சி.

15 தொடர்ச்சி – பக்கம்



## உண்மை உறைக்கும்

கமிலஸ்






# பாலன் இயேசுவுக்கு ஓர் கவிதைச்சரம்

## இயேசு பிறந்திட்டார்

மார்கழி குளிரினில் மழை இருட்டினில்
நட்சத்திரம் சூழ்ந்திட
வானதூதர்கள் வாழ்த்திட
பிறந்திட்டார் பாரின் வேந்தன்

பாவங்கள் போக்கி அருள் ஒளி ஏற்றிட
மாமரியின் மைந்தனாய்
விண்ணகம் ஆளும் ~ வேந்தன்
பிறந்திட்டார்

உண்மை ஒளியை ஏற்றிட ~ எம்
குறைகளை தீர்த்திட காலங்கள் ஆளும்
கன்னியின் மைந்தனாய்
பூவுலகில் அவதரித்திட்டார்

வார்த்தையானவர் குழந்தையாக
பூவுலகிற்கு வந்திட்டார்
வானங்கள் எல்லாம்
அதிரப் போற்றிப் புகழ்ந்திடுவோம்



## பிறந்திட்டார் மைந்தன்

பாவங்கள் சேர்ந்த உலகிலே
பாவ இருள் அகற்றிட
மாமரியின் மைந்தனாய்
மண்ணிலே உதித்திட்டார்
பூவுலகே வாழ்த்துரைக்க
பூவுலகின் மைந்தனாய்
அனைவரையும் அன்பினால்
அரவணைக்க பிறந்திட்டார்
இடையர்கள் வாழ்த்திட
இல்லங்கள் மகிழ்ந்திட
உள்ளங்கள் உவகையில் பொங்கிட
உண்மை வழியை காட்டி
பிறந்திட்டார்
வானத்திலே வெள்ளி தோன்றி
வாழ்க்கையில் இன்பம் தோன்றிட
மலராய் பிறந்த மைந்தனை
மனமார வாழ்த்திடுவோம்

ஆக்கம்: **ச. தேனுஜா**
**புனித பிரான்சிஸ் சலேசியார் ஆலயம்,**
**சங்கானை, யாழ்ப்பாணம்**

## இயேசுவே

அன்பான இயேசுவே
ஆதரவளிக்கும் இயேசுவே
இனிமையான இயேசுவே
ஈடேற்றும் இயேசுவே
உண்மையான இயேசுவே
ஊக்கம் அளிக்கும் இயேசுவே
எம்மவர் இயேசுவே
ஏழைகளின் இயேசுவே
ஐயம் தீர்க்கும் இயேசுவே
ஒற்றுமையின் இயேசுவே
ஓர்குலமான இயேசுவே
ஔடதமான இயேசுவே
பாருலகில் பிறந்த இயேசுவே
வாழ்த்தி வணங்குகின்றோம் இயேசுவே



# என் பெயர் கொண்ட மக்களே !

## என் பிறந்த நாளுக்கு நான் எழுதும் கடிதம்

**அருட்பணி. பிலிப் I.V. Dei**

ஒவ்வொரு ஆண்டும் மார்கழி 25ஆம் திகதி என் பிறந்தநாள் என்பதை நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியவேண்டும் என்பதில்லை. என்னை ஏற்காதோருக்கும் இது என் பிறந்தநாள் என்பது தெரியும்.

இந்நாளைச் சிறப்பிக்க நீங்கள் வீட்டிலும் ஆலயத்திலும் கிறிஸ்மஸ் மரங்களை நட்டு, பாலன்குடில் வைத்துச் சோடிக்கிறீர்கள். நள்ளிரவில் பட்டாசுகளின் வெடிசத்தங்கள் மத்தியில் மின் அலங்காரங்கள் மினுங்கத் திருப்பலிக்குப் போய் வருகிறீர்கள். காலையானதும் புத்தாடை உடுத்தி விழாவைச் சிறப்பித்து வாழ்த்துக்கள் கூறி விருந்தாடுகிறீர்கள். என் பிறந்தநாளை முன்னிட்டு ஒளிவிழாக்களை ஒழுங்கு செய்கிறீர்கள். விழாவின்போது பரிசுப் பொருட்களையும் பரிமாறுகிறீர்கள். கிறிஸ்மஸ் தாத்தா நீண்ட தாடியோடு சிவப்பு நிற ஆடையில் தோன்றிக் கோமாளியாகக் கூத்தாட எல்லோரும் கைகொட்டிச் சிரிக்கிறீர்கள். இவ்வாறு என் பிறந்த நாளுக்குரிய எல்லா நிகழ்வுகளையுமே என்னிடம் ஒருவார்த்தை கேளாமல் நீங்களே ஒழுங்கு செய்து கொண்டாடுகிறீர்கள்.

இவற்றையெல்லாம் அவதானிக்கும் நான், என் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் எனக்கா அல்லது உங்களுக்காக என்ற கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். எல்லா நிகழ்ச்சிகளும் என் பெயரில் நீங்களே ஒழுங்கு செய்கிறீர்கள். ஆனால் விழா நாயகனாக என்னிடம் உங்களில் எவராவது இவைபற்றி என் அபிப்பிராயத்தைக் கேட்பதே இல்லை. என் பிறந்தநாளில் எல்லாவற்றையும் என் விருப்பத்துக்கு மாறாகவே செய்கிறீர்கள்.என் பிறப்பைத் தியானித்த புனித பிரான்சிஸ் அசீசியார் குடிலை அமைத்து என் ஏழ்மையையும், எளிமையையும் உள்வாங்கினார். நீங்கள் வீட்டிலும் ஆலயத்திலும் அமைக்கும் குடில்கள் மூலம் என் ஏழ்மையையும் எளிமையையும் உள்வாங்குகிறீர்களா? என்று ஒரு நிமிடம் சிந்தித்துப்பாருங்கள். தற்காலத்தில் பாலன் குடில்கள் எல்லாம் சோடினைப் பொருட்களாக்கிவிட்டதால், நீங்கள் அவற்றின் உட்பொருளை இழந்துவிட்டீர்களா? என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஒளி விழாக்களில் சினிமா மெட்டுக்களில் ஆடிப்பாடுகிறீர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன் நான் பெத்லகேமில் பிறந்தபோது வானோர் இசைத்தார்களே! அதுவல்லவோ எனக்கு விருப்பமான பிறந்த நாள் பாடல். நீங்கள் உங்கள் மனம்போன போக்கில் ஆடிப்பாடினால் அது எனக்குப் பிடித்த பிறந்த நாள் கொண்டாட்டம் என்று நினைக்கிறீர்களா?

பகிர்தல் என்ற பெயரில் வீட்டிலே பாவித்த பழைய உடுப்புக்களை ஏழைகளுக்குத் தள்ளுகிறீர்கள். நீங்கள் புத்தாடை உடுத்த வேண்டும் என்பதற்காகவே ஏழைகளுக்குப் பழையதைக் கொடுக்கிறீர்கள். இதுவா என் பிறந்தநாளில் நான் விரும்பும் பகிர்தல்?

ஆயராய் இருந்த புனித நீக்கிலாஸ் செல்வந்தரிடம் இருந்து பணம், பொருள் சேர்த்து ஏழை இளம் பெண்களைக் கரைசேர்ப்பதைத் தன் பணியாகக் கொண்டிருந்தார். இவரின் வாரிசாக வந்தவர்கள் "சாந்தக் கிளாவுஸ்" என்ற கிறிஸ்மஸ் தாத்தா. இக்காலத்தில் இவர் கிறிஸ்மஸ் காலத்தின் வசூல் தாத்தாவாக மாறிவிட்டார். அக்காலத்தில் ஏழைகளுக்கு உதவிசெய்யச் சேர்க்கப்பட்ட நிதி, இக்காலத்தில் தங்களின் சொந்தக் கொண்டாட்டச் செலவுக்காகச் சேர்க்கப்படுகிறது. இதையா நான் என் பிறந்தநாளில் விரும்புகிறேன். நான் மனிதனாகப் பிறந்தது என்னுடைய நன்மைக்காக அல்ல. பாவத்தின் பிடியில் அகப்பட்டுக்கொண்ட உங்களை மீட்பதற்காகவே! நான் பாவத்தில் இருந்து உங்களை மீட்டு, நீங்கள் தொடர்ந்து பாவமில்லாது வாழப் பாவ மன்னிப்பு என்ற அருட்சாதனத்தைத் தந்திருக்கின்றேன். நீங்களோ வருடக்கணக்காகப் பாவமன்னிப்பு அருட்சாதனத்தைப் பெறாது தொடர்ந்து என் பிறந்த நாளைக் கொண்டாடி வருகிறீர்கள். இதையா நான் என் பிறந்தநாளில் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்?

விழாநாயகனான எனக்கு அழைப்பு இல்லாமலே நீங்கள் ஆண்டுதோறும் என் பிறந்தநாளைக் கொண்டாடி முடிக்கிறீர்கள். இது எனக்கு வருத்தத்தைத் தந்தாலும் நான் எனக்குரிய முறையில் என் பிறந்தநாளைக் கொண்டாட எண்ணியுள்ளேன். என் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள விரும்பியவர்கள் தங்கள் பெயரை ஏழ்மையாகவும், எளிமையாகவும் வாழ்வதன் மூலம் பகிர்தலின் வழியாகப் பதிவு செய்யலாம். தங்கள் பெயர்களைப் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே நான் அழைப்பிதழ் அனுப்புவேன். இவர்கள் மட்டுமே எனது பிறந்தநாள் விருந்தில் பங்கெடுக்கலாம். தங்கள் பெயரைப் பதிவு செய்யாதவர்களுக்கு நான் அழைப்பிதழ் அனுப்பமாட்டேன். அழைப்புப் பெற்றவர்களுக்குச் சிறப்பான இருக்கைகளையும் ஆயத்தம் செய்வேன். இந்த விழா விண்ணகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கே நான் உங்களை சந்திப்பேன்

நன்றி

இயேசு





# பெத்லகேம் பெருவிழா




**மோட்சம் ஒரே விழாக்கோலமாக இருந்தது. இயேசுவின் பிறந்தநாளாம் இன்று. ஒரே பரபரப்பாக வானதூதர்கள் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். இயேசு தூதர்களிடம் "இந்த வருடம் என் பிறந்தநாளை பூமியில் மனிதர்களோடு கொண்டாடப் போகின்றேன்" என்றார். "அப்போ நாங்களும் உங்களோடு வருகின்றோம்" என்றனர். "சரி கிளம்புங்கள்" என்றார் இயேசு.**

பூமி நோக்கி வருகையிலேயே பட்டாசு, வெடிகள் பூப்பூவாய் வானில் வெடிக்க, இயேசு சிறு குழந்தையாகி மகிழ்ந்து சிரித்தார். **"என் பிறந்த நாளை இவ்வளவு சிறப்பாக கொண்டாடுகிறார்களே மாந்தர்கள்! அதோ அங்கே ஜெகஜோதியாக வண்ண விளக்குகளில் ஒளி பிரகாசமாக தெரிகிறதே. அங்கே செல்லலாம்"** என இயேசுவும் வானதூதர்களும் அங்கே சென்றனர். ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகளும், இளைஞர்களும் குவியலாக பட்டாசுக்களை வைத்துக் கொண்டு வெடித்து மகிழ்ந்தனர். **"என்னவொரு மகிழ்ச்சி அவர்கள் பிறந்தநாளுக்கும் இந்த வானவேடிக்கை எல்லாம் உண்டா?"** என்று இயேசு கேட்க **"இல்லை ஆண்டவரே! உங்க பிறந்தநாளுக்கு மட்டும்தான் இந்த கொண்டாட்டம்"** என்றனர் வானதூதர்கள். **"என்ன ஒரு பெருந்தன்மை. அவர்கள் பிறந்த நாளைவிட என் பிறந்த நாளுக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்கிறார்களே! சந்தோஷமாக இருக்கின்றது. சரி இவர்களது பெற்றோர்களை உள்ளே சென்று பார்ப்போம்".** பெண்களின் சிரிப்பொலியும் பேச்சும் கேட்க இயேசு அங்கே நுழைந்தார். தங்கங்களும், வைரமும் ஜொலிக்க பட்டுச்சேலைகள் பளபளக்க அந்த அறையே தகதகவென தங்க ஒளியால் நிறைந்திருந்தது. **"பெண்கள் இவ்வளவு அலங்கார பதுமைகளாக காணப்படுகின்றார்களே! இதில் எவ்வளவு சந்தோஷம் கிடைக்கும்?"** என்று இயேசு கேட்க **"ஆமாம் ஆண்டவரே! பெண்களின் ஒட்டுமொத்த சந்தோஷமே நகையும் சேலையும் தானே. இன்று தான் அவர்களின் வசதியைக் காட்ட ஒரு வாய்ப்பு கிடைக்கிறது"** என்றனர் தூதர்கள்.

சரி ஆண்களின் சந்தோஷம் எதில் எப்படி என பார்ப்போம் என அடுத்த அறையில் நுழைந்தது இயேசுவின் பட்டாளம். அங்கே பெரிய மேசை மீது விதவிதமான மதுபான பாட்டில்களும் அசைவ உணவு வகைகளும் என பரப்பி வைக்கப்பட்டிருக்க, அட்டகாசமான சிரிப்பொலியையும், மகிழ்ச்சியையும் ஆண்களிடம் பார்த்த இயேசு **"மதுபானம் இவ்வளவு மகிழ்ச்சி தருகிறதா? சரி அவர்களின் சந்தோஷத்தை நாம் கெடுக்க வேண்டாம்... நாம் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கின்றது. வாருங்கள் போவோம்"** என அங்கிருந்து கிளம்பினர். **"சரி அடுத்து நாம் எங்கு போகின்றோம்?"** என்றார். **"இப்ப நாம் பார்த்த பகுதி மிகவும் வசதிபடைத்தோர் பகுதி. அடுத்து நாம் பார்க்கப் போவது நடுத்தர மக்கள் வாழும் பகுதிக்கு"** என அங்கே சென்றடைந்தனர்.

சில குழந்தைகள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தனர். ஒரு குழந்தை கையில் பலகாரங்களோடு வர இயேசு அருகில் போய் **"எங்கே பாப்பா போகிறாய்?"** என்றார். **"என் அத்தை வீட்டிற்கு கிறிஸ்மஸ் பலகாரங்கள் கொடுக்கப் போகின்றேன்"** என்றான். உறவினர், நண்பரோடு சந்தோஷத்தை பகிர்ந்து கொள்கின்றனரே. சரி இவர்களது அம்மாக்கள் என்ன செய்கின்றார்கள் என அங்கு சென்றார். பெண்கள் அடுப்படியில் மும்முரமாய் வகை வகையான சமையலில் உழன்று கொண்டிருந்தனர். ஆண்கள் ரொம்ப சொகுசாக தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தனர். சில ஆண்கள் தொலைபேசியில் வாழ்த்து பகிர்ந்து கொண்டிருந்தனர். சில வீடுகளில் நண்பர்கள், உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. மிகுந்த ஆர்ப்பாட்டம் இல்லாமல் கூட இந்த மக்களிடம் மகிழ்ச்சி நிறைவாக இருக்கிறதே. சந்தோஷம் எனக் கூறி கிளம்பினார்கள் இயேசுவின் குழுவினர். பல வீடுகள் சென்று பார்த்ததில் நேரமாகிவிட சரி நாம் வீட்டிற்கு கிளம்பலாம் எனக்கூறி கிளம்புகையில், ஒரு பகுதியில் வானவேடிக்கைகள் இல்லை. எந்த சப்தமுமில்லை. **"ஏன் இங்கே அமைதியாக இருக்கிறது? என்ன நடக்கிறது பார்ப்போம் வாருங்கள்"** என இயேசுவின் குழு அங்கே சென்றது.

எதிரில் சிறுவன் வேகமாக வர இயேசு அவனிடம் **"என்ன தம்பி ஊரே கிறிஸ்மஸ் கொண்டாடுது, நீங்க கொண்டாட மாட்டீங்களா?"**

**"இல்ல ஐயா, இந்த கிராமத்தில் நாங்க மட்டும் தான் கிறிஸ்தவர்கள். இனிமே தான் கொண்டாடுவோம்".**

**"ஏன் பகல்ல கொண்டாட மாட்டீங்களா?"**

**"அதுக்கு வாய்ப்பே இல்லை ஐயா"**

**"ஏன்?"**

**"எங்கப்பா டிரைவர் வேலை பார்க்கிறாரு. இன்னிக்கு விசேஷனால முதலாளி அவங்கள கோவிலுக்கு கூட்டிட்டுப் போகனும், கடைக்கு போகனும்னு அப்பா ரொம்ப பிஸியா இருப்பாங்க" "சரி அம்மா?"** என்று கேட்டார் இயேசு.

**"அம்மா 4 வீட்டில வேலை செய்யறாங்க. இன்னிக்கு அந்த வீடுகளெல்லாம் சமையல் வேலை, வீட்டு வேலை என வேலை நிறைய இருக்கும். அதெல்லாம் முடிச்சுட்டு வர நேரம் ஆயிடும்"** என்றான்.

**"டேய் டேவிட் சீக்கரம் வாடா"** என்று அவன் அம்மாவின் குரல் ஒலிக்க **"ஐயா நீங்க அதோ அந்த மைதானத்துல போய் உட்காருங்க. அங்கதான் கிறிஸ்மஸ் கொண்டாடுவோம்"** என அவசர அவசரமாக சொல்லிக் கொண்டே ஓடி விட்டான். இயேசு மைதானம் செல்ல அங்கு சிறுமிகள், சிறுவர்கள், பெரியவர்கள் என கலகலப்பாக மைதானம் காணப்பட, ஒரு பெரியவர் வந்து **"ஐயா புதுசா? வெளியூரா? டேவிட் வீட்டுக்கு வந்தீங்களா?"** என்று கேட்க

இயேசு **"சும்மா இந்த ஊரைப் பார்க்க வந்தேன். ஆமா இந்த ஊரில் எத்தனை குடும்பம் இருக்கு?"**

**"30, 35 குடும்பங்கள் இருக்கு"**

**"எல்லோரும் என்ன வேலை செய்றாங்க?"**

**"இங்குள்ள பாறைகள்ல கல்லு உடைக்கிறாங்க. மழை நேரம் வந்தா கஷ்டந்தாங்க. பாறை வழுக்கும். வேலை செய்ய முடியாது. வெயில் காலத்தில விடியக்காலம் போயி உச்சி வெயில் வர்ற வரை வேலை பார்த்து திரும்புவோம். இந்த பிள்ளைங்க படிச்சு தலையெழுத்த மாத்தனும். அதுவரை கஷ்டந்தாங்க".**



அந்த நேரத்தில் டேவிட் ஓடி வர இயேசு டேவிட் குடும்பத்தை பத்தி விசாரிக்கிறார். பெரியவர் **"அதுவாங்க சுனாமி வந்தப்ப வீடு வாசல் இழந்து எங்க போறதுன்னு தெரியாமா கால்நடையா எங்க ஊர்க்கு வந்தப்ப பேச்சு மூச்சு இல்லாம மயங்கி விழுந்திட்டான் டேவிட். அப்ப நாங்கதான் அவன் உசிற காப்பாத்தி அடைக்கலம் கொடுத்தோமுங்க. அந்த நன்றிக்காக 5 வருசமா தவறாம இந்த நாள்ல ஒட்டு மொத்த கிராமத்துக்கும் பட்டாசு இனிப்பு கொடுத்து சந்தோஷப்படுவாங்க. ரொம்ப நல்ல மனசுங்க அவங்களுக்கு. அதோ டேவிட் அப்பா அம்மா வந்துட்டாங்க. வாங்க நாமும் போவோமுங்க"**

டேவிட் அப்பா, எல்லா சிறுவர்களையும் வட்டமாக நிற்கச் செய்தார். டேவிட் அம்மா, மெழுகுவர்த்தி ஏற்றி டேவிட் அப்பா கையில் கொடுக்க அவர்கள் அனைவரும் அமைதியானார்கள். டேவிட் அப்பா செபம் சொல்ல ஆரம்பித்தார். **"அன்பின் குழந்தை இயேசுவே, இந்த நல்ல நாளுக்காக நன்றி கூறுகின்றோம். இந்தச் சிறுவர்கள், அவர்களின் பெற்றோர்கள் அனைவரையும் ஆசீர்வதியும். குழந்தையாக பிறந்திருக்கும் அன்பு இயேசுவே! எங்கள் மத்தியில் வாரும். இச்சிறுவர்களின் பட்டாசு மகிழ்ச்சியில் எவ்வித ஆபத்தும் இடையூறும் இன்றி பாதுகாத்து அருளும். இக்கிராமத்து மக்கள் எங்களுக்கு அடைக்கலம் தந்த கிருபைக்காக நன்றி கூறுகின்றோம். அவர்களை நிறைவாய் ஆசீர்வதியும்"** என்று கூறி செபத்தை முடித்தார்.

சிறுவர்கள் அனைவருக்கும் டேவிட் மத்தாப்பு எடுத்துக் கொடுக்க, அனைவரும் டேவிட் அப்பாவின் கையிலிருந்த மெழுகுவர்த்தியில் ஏற்றிக் கொண்டு மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பட்டாசு கொளுத்த அந்த கிராமமே ஒளி ஒலியால் நிறைந்தது. வெடித்து முடித்து, சிறுவர்கள் சாப்பிட தயார் ஆனார்கள். பெரியவர்களும், சிறுவர்களும் வட்டமாக அமர, அவர்களோடு இயேசுவும் அமர்ந்தார். டேவிட் அம்மாவும், அப்பாவும் தட்டுக்களில் சாப்பாடும், இனிப்பும் வைத்துக் கொடுக்க டேவிட் ஓடி ஓடி அனைவருக்கும் கொடுக்க பெரியவர்கள் அவனை கட்டி அணைத்து முத்தமிட்டனர். டேவிட் ஓடி வந்து இயேசுவுக்கும் கொடுக்க, இயேசுவும் கட்டியணைத்து அவரது நிறைவான



ஆசீரை பொழிந்தார்.

நிறைந்த மனதுடன் இயேசு கிளம்பினார். தூதர்களிடம் **"நான் விரும்பிய, விரும்புகின்ற கிறிஸ்மஸ் இதுதான். நாசரேத்தில் என் அம்மா, அப்பாவுடன் என் பிறந்த நாளை கொண்டாடிய மகிழ்ச்சி எனக்கு கிடைத்தது. இதுதான் பெத்லகேம் பெருவிழா"** எனக் கூறி விண்ணகத்திற்குத் திரும்பினார்.

## அறிவித்தல்

கொழும்பு கத்தோலிக்க அச்சகமானது நத்தார் விடுமுறைக்காக மார்கழி மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும். மீண்டும் மார்கழி மாதம் 30ஆம் திகதி வழமைப்போல் சேவைகள் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். நன்றி


## தங்களுடைய நத்தார் புத்தாண்டு பரிசு ஞான ஒளியாக இருக்கட்டும்

என்ன? நத்தார் புத்தாண்டு பரிசு அளிக்கப் போகிறீர்களா? பரிசு அளிக்கும் போது சிறந்த பரிசாக இருக்க வேண்டுமல்லவா? ஞான ஒளியையே சிறந்த பரிசாக அளித்திடுங்கள்

தங்கள்பரிசு ஞான ஒளியாக இருக்கட்டும் தங்களது நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், ஓராண்டிற்கே அல்லது அரை ஆண்டிற்கோ, ஒளியாக பிறந்த இயேசுவை ஞான ஒளி வாயிலாக அளித்திடுங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி

ஞான ஒளி
ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை, பொறளை - 08

இப்பத்திரிகையைப் பற்றி அறியாதவர்களுக்கு இப்பத்திரிகையை வாங்க ஊக்கப்படுத்துங்கள்



**அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்**




# ஏழ்மையின் கோலத்தால் புனிதம் மலர்ந்தது...

"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!
உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!"
(லூக் 2:14)

ஆக்கம் : செ. லொயிஸ் செலின், புனித அந்தோனியார் ஆலயம்,
பென்றித் – அவிசாவளை.



ஏழ்மையின் உருவாக, ஏழைகளின் அரசனாக, புவியின் விடிவெள்ளியாக இவ்வுலகில் பிறந்த இயேசுவின் பிறப்பு பற்றிய செய்தி முதன் முதலில் மந்தைகளை மேய்க்கும் மேய்ப்பர்களுக்கே வானதூ-தர்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால் இக்காலகட்டத்தில் ஏழை எளியவர்களை தகர்த்தெறிந்து ஒதுக்கிவைக்கும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளும், சம்பவங்களும் நடைபெற்றுக் கொண்டேதான் வருகின்றன. எனினும் இன்று நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் எனும் விழாவின் கதாநாயகனாகிய இயேசு கிறிஸ்து, அன்று ஏழ்மையின் உருவாக, ஏழைகளின் அரசனாக பிறந்தார் என்பதனை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

ஏழைகளின் உள்ளம் கொண்டவர்களே, தம் அரசில் நுழையக் கூடியவர்கள் என்று காட்டவே, எம் இறைத்தந்தை தம் ஒரே மகனை ஏழ்மையின் உருவில் இவ்வுலகிற்கு அனுப்பினார். ஆனால் இன்று கிறிஸ்மஸ் என்றாலே எம் கண்முன் தோன்றுவது குதூ-கலமான கொண்டாட்டமாகும். ஆனால் வெறுமனே உண்பதும், குடிப்பதும், உல்லாசமாய் பட்டாசு வெடிப்பதும் மாத்திரமல்ல கிறிஸ்மஸ். அதன் உண்மையான அர்த்தத்தினை புரிந்து செயற்பட வேண்டும்.

ஆறு நாட்களாக தனது ஆற்றலைப் பயன்படுத்தி, அன்பின் மிகுதியால் நம் வானகத்தந்தை படைத்த இப்பூவுலகு ஒரு சிறு தவறினால் மாசுபடிந்து, ஒளியிழந்து போனது. நம்மைத்தவிர வேறு யாராலும், இப்பூமியை ஒளியுள்ளதாக்க இயலாது என அறிந்த எம் இறைத்தந்தை, தம் ஒரே மகனையே பேரொளியாக அனுப்பினார். பூமியில் சூழ்ந்துள்ள பாவம் எனும் இருளைப் போக்கி மீட்பு எனும் ஒளியினை கொடுக்கும் மீட்பர் இயேசுவின் பிறந்ததினமே இன்று நாம் மகிழ்வுடன் கொண்டாடும் கிறிஸ்மஸ் தினமாகும்.

பாவத்தினால் இழந்துபோன உறவை மீண்டும் இணைக்கவே இறைமகன் மனிதனானார். "இதோ கன்னிப்பெண் கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவர் இம்மானுவேல் எனும் பெயர் பெறுவார்" என்று இறைவாக்கினர் எசாயா முன்னறிவித்ததின்படி இயேசுக்கிறிஸ்து இம்மானுவேல் என அழைக்கப்பட்டார். இம்மானுவேல் என்றால் "கடவுள் நம்மோடு" எனப் பொருள்படும். இறைத்தன்மையில் விளங்கிய இயேசு, மனிதனோடு உறவுகொள்ளவும், மனிதனோடு மனிதனாக வாழவும் நம்மிடையே குடிக்கொண்டிருக்கின்றார். என்றுமே எம்முடன் குடிகொண்டிருக்கும் இயேசுவை, எம்முடனே தக்கவைத்துக் கொள்ள நாம் செய்ய வேண்டியது என்னவெனில், பாவ இருளை எம்மிலிருந்து அகற்றுவதேயாகும்.

மனுவுருவமான இறைமகனின் பிறப்பு விழாவினை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட, உண்மைக் கிறிஸ்தவர்களாக, இயேசுவை எம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் மகிழ்வுடன் வரவேற்க மனம் மாறுவோமாக. ஒளியை கொடுக்க எம்மிடம் வந்த இறைமகன் இயேசு, தாம் வாழ்ந்த காலம் முழுவதும் மக்களிடையே அன்பை நிலைநாட்டி, மனிதத்தின் மேன்மையை உணரச்செய்தார். இவரது வருகையானது ஏழைகளுக்கு நற்செய்தியாய் இருந்தது. ஆகவே கிறிஸ்மஸ் காலத்தில் நாம் உண்மையான கிறிஸ்மசின் உள்நோக்கத்தை உணர்ந்து செயலில் காட்டவேண்டும். ஏழை எளியவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், மேலும் தாழ்நிலையில் வாடுபவர்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டினால், நாம் கொண்டாடும் இயேசுவின் பிறப்பு விழாவாகிய கிறிஸ்மஸ் விழா அர்த்தமுள்ளதாய் மாறுகின்றது.

இறைசாயலில் படைக்கப்பட்ட நாம் ஏழ்மையுள்ளம் கொண்டவர்களாக மாறவேண்டும். எத்தகைய சூழ்நிலைகளிலும் தாழ்ச்சியுள்ளவர்களாக இருக்க-வேண்டும். நமது தாழ்வான வாழ்வின் மூலம் அவருக்கு சான்று பகரவேண்டும். இயேசுக்கிறிஸ்து பிறந்த மாட்டுக்குடிலினை அலங்கரித்து மகிழும் நாம், அவர் எம்மிடையே விட்டுச்சென்ற வார்த்தைகளை நாள்தோறும் எம் இதயங்களில் ஏற்று மகிழ்வோம். வெள்ளையடிப்பது எமது இல்லத்திற்கு மட்டுமல்ல, இறைவன் குடிகொண்டிருக்கும் எமது உள்ளங்களுக்குமாகட்டும். பட்டாசுகள் வெடிப்பதுபோல இயேசுவின் அன்பினை பாரெல்லாம் மறைசாற்றிடுவோம்.

இந்த உலகின் மீது வெற்றி கொண்டவர் நம் மீட்பர் ஒருவர் மாத்திரமே. எனவே அவரின் அன்புப் பிள்ளைகள் என்ற எதிர்நோக்கோடு, அவரின் மாபெரும் கொடையான அன்பையும், சமாதானத்தையும், துன்பப்படுபவர்களுடனும், ஆதரவின்றி அன்பிற்காக ஏங்கி தவிப்பவர்களுடனும், பகிர்ந்து, இவ்விழாவை அதி உன்னத சிறப்பான விழாவாக கொண்டாட வேண்டும். இதுவே ஏழ்மையின் கோலமாய் அவதரித்த எம்மீட்பர் இயேசு கிறிஸ்துவுக்கு நாமளிக்கும் பிறந்த நாள் பரிசாகும்.

'அன்பும் அமைதியும் நிறைந்த கிறிஸ்து பிறப்பு மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்கள்!'

# இறைவன் பிறந்த இரவு



வையத்துக் கடுங்குளிர்ச்சி
வாட்டும் இரவுகளில்
வழக்கமான இரவா அது?
மீட்பை மையமாய் வைத்தே
மேதினிக்கு பெருமை சேர்த்த
மேன்மைமிகு இரவே அது!



பையப் பைய பாவம்
பரவியதா லிந்த
பூமியே இருளாயிற்று - எங்கள்
அய்யன் இயேசுபிரான்
அவதரித்த அவ்விரவால்
அவனிமிகு அருளாயிற்று!

ஆடு மேய்ப்பவருக்கே
ஆண்டவர் பிறந்த சேதி
அவ்விரவில்
சொல்லப்பட்டது - ஒரு
ஈடு இணையற்ற
இரவாய் அதுவமைய - பாவம்
படுகுழியில் தள்ளப்பட்டது.
ஏடு வழி இறைவாக்கு
எடுத்துரைத்த எதிர்பார்ப்பு
அன்றிரவு
வெல்லப்பட்டது - எங்கோ
மாடடைக் குடில் தேடி
மழலை முகம் தரிசிக்க - மந்தை
காவல் குழு சென்றடைந்தது.

ஈன்றோராய் சூசை மரி
இறைமகனின் அருகிருக்க
இனிமைமிகு இரவாயிற்று! பல
சான்றோர்கள் முன்னுரைத்த
சத்திய இறைவாக்கு அன்றிரவே
நிறைவேறிற்று!
ஆன்றோராய்த் தோன்றவில்லை
அரசராய்க் காலூன்றவில்லை
ஏழ்மையொன்றே வரவாயிற்று
வானோர்கள் புகழொலிக்க
வார்த்தை மனுவுருவெடுக்க
மானிடர் தம் உறவாயிற்று.

குளிர்மிகு இரவு அதை
குவலயத்தார் மறந்திடாது
கொண்டாடல் என்றும் வாடிக்கை!
துளிர்விடும் பாவங்களை
வளரவிட்டு வாழ்வோர்க்கு
கிறிஸ்து பிறப்பு வெறும்
கேளிக்கை! இளந்
தளிரென ஏழ்மையிலே
இயேசு குழந்தை பிறந்த நிலை
காண்பதற்கு அல்ல
வேடிக்கை - அவரின்
ஒளிர் முகம் தரிசித்திட
உண்மையிலே
விருப்பப்பட்டால் - உள்ளத்
தூய்மையொன்றே நமது
காணிக்கை

# இறைமகன் பாலகனாய்



அன்று ஒருநாள் பெத்லேகேமில்
தரணி மக்கள் உறங்கும் வேளை
மாட்டுக் குடிலில் எளியவராய்
எளியவரின் துயர் துடைக்க
இறைமகனும் மானிடராய்
பிறந்துவிட்டார் மண் உலகில்

மாந்தர்களின் பாவம் போக்க
பாவகுழியில் எம்மை மீட்க
தரணி ஆளும் வேந்தனாக
அவதரித்தார் எமக்காக

அமைதி எங்கும் ஒளிரச் செய்ய
மனுக்குலத்தை மீட்டு எடுக்க
விடுதலையை நாம் சுவாசிக்க
பரமன் இயேசு பிறந்துவிட்டார்.

புலரும் இந்த புது விடியலை
நாடி நாமும் விரைந்து சென்று
முடிவில்லாத வாழ்க்கையை
நாம் அடைந்திடுவோம் விரைவிலே



ஆக்கம் :
J.C. ரஷ்மி டிலானி,
தரம் – 9, (சிங்கள மீடியம்),
வனத்து சின்னப்பர் ஆலயம்,
திகன

# ஞாயிறு சிந்தனை – பேதுரு




## திருவருகைக் காலத்தின் நான்காம் ஞாயிறு
## 22.12.2013

**வாசக விளக்கம்:** மரியாள் என்னும் கன்னி வழியாகக் கடவுள் குழந்தையாகப் பிறந்து நம்மோடு தங்குவார் என எசாயா தீர்க்க தரிசனம் கூறுவதை இன்றைய முதல் வாசகம் கூறுகின்றது. தாவீது குலத்தில் பிறந்த இயேசு இறைமகன், அவருக்கு உரியவர்களாக இருக்க நாம் அழைக்கப் பெற்றுள்ளோம் எனக் கூறும் பவுல் அடியார் ஆதியிலே கொடுக்கப்பட்ட வாக்கு தாவீதின் வழிமரபு மனிதனில் தூய ஆவியின் வல்ல செயல், மீட்கும் சக்தி போன்றவற்றையும் இரண்டாம் வாசகத்தால் விளக்குகின்றார். நற்செய்தியில் கடவுள் யோசேப்பிடம் தனது மீட்புத் திட்டத்தினை மரியாவின் மூலமாக தொடங்க இருப்பதாக அறிவிக்கிறார். இதன் மூலம் இயேசுவின் வளர்ப்புத் தந்தை என்ற பெருமை யோசேப்புக்கு கொடுக்கப்படுகின்றது. கடவுள் நம்மோடு "இம்மானுவேல்" என்று குறிப்பிடுவதன் மூலம் இயேசுவின் தெய்வீகத் தன்மையை மத்தேயு எடுத்துக் கூறுகின்றார். கடவுளிடமிருந்து வந்தவர் மனித அவதாரத்தில், மனித வரலாற்றில் நுழைகிறார். நெருங்கி வரும் கிறிஸ்து பெருவிழாவிற்கு நம்மை தகுந்த விதத்தில் தயாரிக்க சூசை முனியின் வழியாக இறையருளை வேண்டுவோமாக...

**முதல் வாசகம் :** எசாயா 7:10-14
இதோ கன்னிப்பெண் கருத்தாங்குவார்

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவர் எழுந்தருள்வார் மாட்சிமிகு மன்னர் இவரே.

**இரண்டாம் வாசகம் :** உரோ 1:1-7
தாவீதின் மரபினரான இயேசு கிறிஸ்து கடவுளின் மகன்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு இம்மானுவேல் அதாவது "கடவுள் நம்முடன் இருக்கிறார்" எனப் பெயரிடுவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 1:18-24

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்

"கடவுள் நம்மோடு இருக்கிறார்" என்ற உண்மையை தன் மக்களுக்குப் போதிக்கும் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் தமது சொல்லாலும், செயலாலும் கடவுள் நம்பிக்கையில் நிலைத்திடத் தேவையான அருட்கொடைகளை வழங்கிட அவர்கள் உள்ளங்களில் எழுந்தருளி வாரும்...

இன்னும் சில தினங்களில் மனித அவதாரத்திலே குழந்தையாக பிறக்க இருக்கும் இயேசுவை எம் உள்ளத்தில் ஏற்கவும், அவர் எமக்கு அருள் வழங்கும் அன்பையும், சமாதானத்தையும் நாம் அனைவருக்கும் வழங்கவும், பல்லின மக்கள் வாழும் எமது நாட்டிலே அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வாழவும் வேண்டிய வரங்களை எமக்குத் தந்தருள எம்மத்தியில் எழுந்தருளி வாரும்..

எமது உயர் மறைமாவட்டத்தில் நாம் அனுசரிக்கும் மரியாளின் ஆண்டிலே மரியன்னை மீது நாம் கொண்டுள்ள மதிப்பும் மரியாதையும் பக்தியும் மென்மேலும் வளரவும் வானதூதரின் செய்தி கேட்டு மரியாளை ஏற்றுக்கொண்ட யோசேப்புவைப் போன்று நாமும் மரியன்னையை ஏற்று, அவளது பரிந்துரையால் நன்மைகள் பெற்று வாழவும் வேண்டிய வரங்களைத் தந்திட எம் மத்தியில் எழுந்தருள வாரும்.

## கிறிஸ்து பிறப்பு பெருவிழா
## 25.12.2013

**வாசக விளக்கம்:** நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியூட்டும் நம் ஆண்டவர் இயேசுவின் மாபெரும் பிறந்த நாளை இன்று நாம் கொண்டாடுகின்றோம். நமக்காக ஒரு மகன் தரப்பட்டுள்ளார். கடவுளின் அருள் அனைத்து மனிதருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற சிந்தனைகள் நமக்குத் தரப்பட்டுள்ளன. மகிழ்ந்து ஆர்ப்பரித்து இறைவனை வாழ்த்திப் பாட இன்றைய முதல் வாசகமும் திருப்பாடலும் அழைப்பு விடுக்கின்றன. இன்றைய இரண்டாம் வாசகமான எபிரேய திருமுகம் மனிதனாகப் பிறந்த இயேசுவின் மாட்சியை விபரிக்கின்றது. கிறிஸ்து நமக்கு விடுதலையைக் கொடுத்து நம்மை அவரது சொந்த மக்களாக்கியுள்ளார் கிறிஸ்துவே நம் மீட்பர் என்று ஏற்றுக்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்ல பவுல் அடியார் அழைக்கின்றார். நற்செய்தியானது இயேசுவின் இறைத்தன்மையை வெளிப்படுத்துகின்றது. இன்றும் நற்கருணை வழியாக நம்மிடையே குடிகொண்டுள்ள இயேசுவை விருப்புடன் நேசித்து அவர் விருப்பப்படி என்றும் வாழவும், பகிர்வு வாழ்வால் அயலாரையும் ஏழைகளையும் மகிழ்விக்கவும், நாம் பகிரும் ஒவ்வொரு தருணத்திலும் இயேசு எம்மில் பிறக்கின்றார் என்பதை உணர்ந்து வாழவும் இறையருள் வேண்டுவோமாக...

**முதல் வாசகம் :** எசாயா 52:7-10
மண்ணுலகின் எல்லைகள் யாவும் நம் கடவுள் அளிக்கும் மீட்பைக் காணும்.

**பதிலுரைப்பாடல் :** உலகெங்குமுள அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

**இரண்டாம் வாசகம் :** எபி 1:1-6
கடவுள் தம் மகன் இயேசு வழியாக நம்மிடம் பேசியுள்ளார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா புலர்ந்தது நமக்குப் புனித நாள், பிற இனத்தாரே வருவீர் இறைவன் மலரடி தொழுவீர் ஏனெனில் உலகின் மீது எழுந்தது பேரொளி இன்றே அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** யோவா 1:1-18

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் அல்லது தந்தை இறைவனே....

உலகில் உதித்த பேரொளியாம் இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாளை மகிழ்ந்து ஆர்ப்பரித்து கொண்டாடும் இன்றைய நாளிலே எமது திருச்சபைக்காகவும் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தையையும், எமது ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலை ஊழியர்களையும் நிறைவாக ஆசீர்வதித்து வழிநடத்தியருள வேண்டுமென்று...

உலகிற்கு ஒளியாக மீட்பாக உதித்த இறைமகன் இயேசுவை கொண்டாடும் இந்நன்நாளிலே எமது நாட்டிற்காக மன்றாடுவோம். எமது நாட்டில் வாழும் ஏழை எளியவர்க்கும், அனாதைகளுக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் உரிமை வாழ்வை இழந்தோருக்கும் எம்மால் இயன்ற உதவிகள் புரிந்து எல்லோரையும் மதித்து மகிழ்வித்து வாழ வரமருள வேண்டுமென்று...

உலகின் மீட்பரை ஈன்றெடுத்த கன்னி மரியாவின் ஆண்டைத் தொடங்கியுள்ள நாம் எமது குடும்பங்களுக்காக மன்றாடுவோம். நம்மிடையே குடிகொண்டுள்ள இயேசுவை நாம் நெஞ்சார நேசித்து அவர் விருப்பப்படி வாழவும் இயேசுவின் பிரசன்னத்தை நற்கருணையில் காணவும், குடும்ப சமாதானத்திற்காக செபிக்கவும் மரியன்னையின் பண்புகளை நாம் பின்பற்றி வாழவும் வரமருள வேண்டுமென்று...

## திருக்குடும்ப பெருவிழா
## 29.12.2013

**வாசக விளக்கம்:** இன்று நாம் திருக்குடும்ப பெருவிழாவை கொண்டாடுகின்றோம். குடும்பத்திலுள்ள அங்கத்தவர்களின் கடமைகளைப் பற்றிப் பேசும் இன்றைய முதல் வாசகம் நம் பெற்றோருக்கு நாம் காட்ட வேண்டிய அன்பு, மதிப்பு, பரிவு ஆகிய நற்குணங்களை சுட்டிக்காட்டுகின்றன. கடவுள் பயம் ஞானத்தின் தொடக்கம் என்றும், கடவுளுக்கு அஞ்சுபவன் பெற்றோரைப் போற்றி வாழ்வான் என்ற கருத்துக்களும் கூறப்படுகின்றன. இரண்டாம் வாசகத்தில் ஒருவர் ஒருவரை அன்பு செய்ய வேண்டும் மெய்யாக நாம் சக மனிதர்களை அன்பு செய்ய வேண்டும் நமக்கு பிறர் செய்யும் நன்மைகளுக்கு நன்றியுள்ளவர்களாக வாழ வேண்டும். குடும்ப செபம் சொல்ல வேண்டும் என்று பவுலடியார் கூறுகின்றார். நற்செய்தியில் குழந்தை இயேசுவின் வாழ்க்கையில் ஒன்றன்பின் ஒன்றாக வந்த ஆபத்துக்களைப் பற்றியும் அதனால் யோசேப்பும் மரியாவும் அனுபவித்த இன்னல்கள் பற்றியும் எடுத்துக் கூறும் நற்செய்தியாளர் மத்தேயு யோசேப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். யோசேப்பு எப்படி இறைவார்த்தையின்படி மரியாவையும் குழந்தை இயேசுவையும் வழிநடத்துகிறார் என்பதை விளக்குகின்றார். இயேசு மரி யோசேப்பு நமக்கு முன்மாதிரி காட்டுகின்றார்கள் அவர்களின் ஆசிரோடு எமது குடும்ப வாழ்வை அமைந்து வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** சீ.ஞானம் 3:2-7, 12-14
ஆண்டவருக்கு அஞ்சுகிறவன் தாய் தந்தையரை மதிக்கிறான்.

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர்

**இரண்டாம் வாசகம் :** கொலோசை 3:12-21
ஆண்டவருக்கு உகந்த குடும்ப வாழ்க்கை

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக! கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகக் குடிகொள்வதாக அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 2:13-15, 19-23

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்:
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

திருச்சபை என்னும் பெருங்குடும்பத்திற்காக மன்றாடுவோம். என்றும் வாழும் தந்தையே திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தைக்காகவும் எமது ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினருக்கும் உமது திருவருளைப் பொழிந்து அவர்கள் அன்பிலும் ஒற்றுமையிலும் நிறைந்து தம் மக்களுக்குப் பணி புரியவும் வழிநடத்தவும் தேவையான அருள்வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

எமது இலங்கைத் திருநாட்டிற்காக மன்றாடுவோம். எமது நாட்டின் அரசியல், சமய, சமூக தலைவர்களும், சகல குடிமக்களும் ஒரே குடும்பமாக ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்றப் பாதையில் வழி நடத்தவும் பிரிவுகள் பிளவுகள் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத புதிய சமுதாயத்தை உருவாக்கவும் தேவையான அருட்கொடைகளைத் தந்தருள வேண்டுமென்று...

அனைத்து குடும்பங்களுக்காகவும் மன்றாடுவோம். திருக்குடும்பத்தின் முன் மாதிரிகையைப் பெற்று எமது குடும்பங்கள் வாழவும், அவ நம்பிக்கைகளை அகற்றி புது நம்பிக்கையில் வழி நடக்கவும், குடும்ப உறவையும் சமூக உறவையும் கட்டியெழுப்பவும் திருச்சபையின் பணிகளில் பங்குகொள்ளவும் குடும்பமாக செபிக்கவும் வேண்டிய வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று..

## இறைவனின் அன்னையாகிய தூய கன்னி மரியா
## புத்தாண்டு பெருவிழா [01.01.2014]

**வாசக விளக்கம்:** புலர்ந்துள்ள இந்தப் புத்தாண்டின் முதல் நாளிலே நம் திருச்சபை "மரியா இறைவனின் தாய்" என்ற உண்மையை கொண்டாடுகின்றது. குருக்கள், இஸ்ரயேல் மக்களை எவ்வாறு என்ன சொல்லி வாழ்த்த வேண்டும் என்பதை விளக்கும் இன்றைய முதல் வாசகம், மக்கள் துன்பத்தினாலும், கவலைகளினாலும் சோர்ந்து அனைத்தையும் முழுமையாக இழந்திட்ட தருணங்களில் குருக்களின் ஆசி மொழிகள் புது தெம்பையும் புது இரத்தத்தையும் புது சக்தியையும் அளித்து மக்களை வழிநடத்துவதை விபரிக்கின்றது. தூய பவுல் அடியார் எபேசில் இருந்து கலாத்தியருக்கு எழுதும் மடலில் இயேசுவின் வருகை பழைய சட்டங்களின் அடிமைப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு கடவுளின் பிள்ளைகளாக மாற்றம் பெற்றார்கள் என்று விளக்குவதை இரண்டாம் வாசகத்தில் காண்கின்றோம். நற்செய்தியில் "மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்துக்கொண்டிருந்தாள்" என தூய லூக்கா வரைகின்றார். உதரத்தில் இயேசுவை பத்து மாதம் தாங்கி ஒவ்வொரு மணித்துளியையும் கன்னிமைகுன்றா தாய்மை என்னும் வரலாறு படைத்த அவர் இப்போது இயேசுவை தன் உள்ளத்தில் தாங்கி ஒவ்வொரு நிமிடத்தையும் அவர் நினைவால் நிறைக்கின்றார். நாமும் அருள் நிறைந்தவர்களாக மாற இயேசுவின் நினைவை எம் உள்ளத்தில் நிறுத்துவோமாக...

**முதல் வாசகம் :** எண் 6:22-27
இஸ்ரயேல் மக்கள் மீது நமது பெயரைக் கூறி நீங்கள் வேண்டும்போது நாம் அவர்களுக்கு ஆசி அளிப்போம்.

**பதிலுரைப்பாடல் :** கடவுளே எம்மீது இரங்கி எமக்கு ஆசி வழங்குவீராக.

**இரண்டாம் வாசகம் :** கலா 4:4-7
கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா பலமுறை பல வழிகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** லூக் 2:16-21

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: தந்தை இறைவனே தந்தை இறைவனே...

மலர்ந்துள்ள புத்தாண்டை மகிழ்ந்து கொண்டாடும் எம் தாய் திருச்சபைக்காக மன்றாடுவோம். இறைவனின் அன்னையாகிய கன்னி மரியாவுக்கு விழாவெடுக்கும் தூய திருச்சபைக்கும் அதன் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவர்க்கும் நிறைவான ஆசீரை பொழிந்தருள வேண்டுமென்று தந்தையே உம்மை மன்றாடுகின்றோம்.

15 தொடர்ச்சி – பக்கம்



# கத்தோலிக்க ஆயர் பேரவையின் நத்தார் செய்தி – 2013

மனிதன் மீது இறைவன் கொண்டுள்ள ஆழமான அன்பையும் அதனால் அவர் மனிதவதாரமெடுத்த நிகழ்வையும் நத்தார் தினத்தில் கொண்டாடுகின்றோம். வானதூதரோடு இணைந்து நாமும் **"தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார்"** (யோவா 3:16) என இறைதந்தையைப் புகழ்ந்து அவருக்கு நன்றி கூறுகின்றோம்.

தமது இறை வாழ்வில் நாமும் பங்குகொள்வதற்காகவே இயேசு இவ்வுலகிற்கு வந்தாரென்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார். **"ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு நான் வந்துள்ளேன்"** (யோவா 10:10). எமது இவ்வுலக வாழ்வை இயன்றவரை, கருத்துள்ளதாக வாழ்வதன் மூலம் அவரது முடிவில்லா வாழ்வில் நாம் பங்கு கொள்ள வேண்டும் என்பதே அவரது சித்தமாக இருக்கின்றது. மனிதவதார மறையுண்மையைக் கொண்டாடுவதன் மூலம் எமக்கு அந்த அழைப்பு தரப்பட்டுள்ளது. அதனால் எமது நத்தார் கொண்டாட்டம், வெறுமனே அவரது பிறப்பு வரலாற்றை நினைவுறுத்துவதாக மட்டும் அமையக் கூடாது. காரணம் எம் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட வாழ்வில் "பிறக்க வேண்டும்" என்பதே அவரது அவா.

இயேசுவின் பிறப்பு மனித வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய நிகழ்வாகும். அவரது பிறப்பினால், நீதி அமைதி, சகோதரத்துவத்தின் யுகம் தோன்றியது. அது நாசரேத் மாட்டுத் தொழுவத்தில் தோன்றிய எளிமையான பிறப்பு பற்றி உலகில் எதிரொலிக்கின்ற செய்தியாகும். 2013ஆம் ஆண்டின் நத்தாரை நாம் கொண்டாடினாலும் தமது பிறப்பின் வழியாக இயேசு என்ன கொண்டு வந்தார் என்பதை உலகம் அறிந்து கொள்ள வேண்டும். மக்களிடையே நீதி, அமைதி, ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் வாழ்விலே மனமாற்றமும் தடைகளைத் தாண்டிச் செல்லும் நிலையும் தேவையாக இருப்பதை எமது திருத்தந்தை பிரான்சிஸ் எமக்கு நினைவுறுத்துகின்றார். மேலும் அவர் எமது மந்தகரமான போக்கில் இயேசுவை சிறைவைக்காது, திருவிவிலியத்தின் ஆரம்பகால புத்துணர்வை மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் கூறுகின்றார். எமது வாழ்வில் முழுமையான புதுப்பித்தலை ஏற்படுத்திக் கொள்வதற்காக இயேசுவுடனும் நீதி, அமைதி அத்துடன் மனித வாழ்வையும் மாண்பையும் புனிதமாகக் கருதும் நற்செய்தியுடனுமான எமது ஒன்றிப்பை அறிவதற்காக எம் ஆன்மாவை சோதித்தறியும் காலமாக இந் நத்தார் அமையவேண்டும்.

ஒவ்வொரு நத்தாரும் நாம் வாழும் சமூகத்தின் உண்மை நிலையை நோக்கிப் பார்ப்பதற்கு எம்மை அழைக்கின்றது. மேலும் எம் மத்தியில் வாழும் ஏழைகளின் பால் அதிக கவனம் செலுத்தவும் பல்வேறுபட்ட துன்ப துயரங்களோடு வாழும் மக்களை உணர்வுபூர்வமாக நோக்கவும் எம்மை அழைக்கின்றது. பெறுமதி மிக்க மனித வாழ்வை இழிநிலைக்குத் தள்ளும் இன்றைய கலாச்சாரத்தின் மட்டில் விழிப்பாயிருப்போம். எமது திருத்தந்தை அண்மையில் வெளியிட்ட "நற்செய்தியின் மகிமை" என்ற அப்போஸ்தலிக்கத் திருவுரையில் கட்டமைப்பு ரீதியான பாவங்களைப் பற்றி கூறுகின்றார். இறைவனின் தூய சித்தத்திற்கு எதிரான அனைத்தையும் மாற்றியமைப்பதற்கு எம்மை அர்ப்பணித்து அமைதியினதும் மனமாற்றத்தினதும் தூதர்களாவோம். இலங்கையை ஒற்றுமையுடன் வாழ்வதற்குரிய இடமாக மாற்றுவதற்கு எம்மை அர்ப்பணிப்போம். இயேசுவுக்காக, இறைவனுக்கு நன்றி கூறி, எமது மகிழ்ச்சியைப் புதுப்பித்து, இந் நத்தாரில் இயேசுவை கண்டறிவதற்கு வரம் கேட்டு செபிப்போம்.

**எமது விசுவாசிகள், அனைத்து பிரஜைகள், நல்மனமுடையோர் அனைவருக்கும் அருள்மிகு நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.**

✠ **அதி மேதகு பேராயர்**
**மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

✠ **மேதகு ஆயர்**
**வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை**
பொது செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை




## அமலன் பிறந்தார்

அழகான இரவினிலே
அகிலமே உறங்கும் பொழுதினிலே
அமலன் பிறந்தார் அற்புதமாக

மார்கழி வாடையோ வீசயிலே
மழைபோல் பனியும் பொழிகயிலே
மரியின் மனமோ மயக்கத்திலே
மகனும் பிறந்தார் மடியினிலே

தந்யையும், தாயும் தனக்கிருக்க
ஆடும், மாடும் அருகில் இருக்க
யாரும் இல்லா பிள்ளைகள் போல்
அன்பர்கள் மூவரும் அங்கிருக்க - பின்

இடையர்கள் அவர்களை சூழ்ந்திருக்க
அரசர்கள் மூவரும் வணங்கி நிற்க
விண்மீன் ஒலியும் நின்றிருக்க
வானதூதர்கள் அவருக்கு வாழ்த்துரைக்க

மனிதனை காத்திடவே மண்மேலே
மனிதனாக பிறந்தார் மன்னவனே
இதை மறவாதே மனிதா ஒருநாளுமே
நீ மறந்தால் உனக்கில்லை மறுவாழ்வே



**ஆக்கம் :**
**S. செல்வி, மாபேரியதென்ன**




மண்ணுலகில் உள்ளங்கள் மகிழ
மானிடர் மீட்பைக் கண்டிட
மாட்டுத் தொழுவமதில் மனுவுருவானார்
மாவேந்தர் இயேசுக்கிறிஸ்து!

விண்ணுலகில் கீதங்கள் இசைக்கப்பட
விண்மீன்கள் ஒளியில் மிளர
விண்ணக தந்தையின் மகனாக
வீரமுடன் அவதரித்தார் இயேசுக்கிறிஸ்து!

ஏழைகளின் ஏழ்மையை நீக்க
எளியவரின் வேண்டுகோள் கேட்க
ஏழ்மைக்கு உயர்வளிக்க
ஏழ்மையாக அவதரித்தார் இயேசுக்கிறிஸ்து!

பாவிகளை மனமாறச் செய்ய
பாசத்தினால் எம்மை அரவணைக்க
பார் எங்கும் மீட்பால் அலங்கரிக்க
பாலகனாய் அவதரித்தார் இயேசுக்கிறிஸ்து!

கருணை மழையில் எம்மை நனைக்க
கனிவாய் எம்மோடு பேச
காலங்கள் கனிந்த நேரமதில்
காப்பாளராக அவதரித்தார் இயேசுக்கிறிஸ்து!

**ஆக்கம் :**
**S.L. செலின், பென்றித், அவிசாவளை**




இஸ்ராயேலின் இருளில்
பிறந்த ஒளிவிளக்கே!
விண்ணிலிருந்து
மண்ணிற்கு வந்த
நட்சத்திரமே!
மானிடனாய் வந்த
மெசியாவே!
அலகையை வென்ற
மானிட மகனே!

கடவுளின் அருளைப்
பெற்ற விடியலே!
மனுக்குலத்தை காக்க
வந்த மீட்பரே!
வார்த்தையால் உலகைப்
படைத்த இயேசுவே!
மனுவுரு எடுத்த கிறிஸ்து
இயேசுவே!

நற்செய்தியினால் மக்களின்
மனதில் இடம் பிடித்தவரே!
உவமைகளால்
பல உண்மைகளை
பொழிந்தவரே!
வெளிவேடக்காரரை
புறக்கணித்தவரே!
எங்களை காக்க வந்த
பாலன் இயேசுவே!

**ஆக்கம் :**
**K. டிவோன்சன், தரம் - 7A, கொழும்பு - 13**

## கிறிஸ்துவே



## பிறக்க வா..

கிறிஸ்துவே எம் இல்லத்தில்
*பிறக்க வா..*
இதயத்தில் இரக்கத்தினை
*நிரப்பிட வா..*
ஏழையின் வாழ்வை
*பிரகாசிக்க வா..*
வறுமையை வறுத்தெடுக்கும்
*வளமையாக வா..*
மண்ணவரின் மன அழுக்கை
*நீக்கிட வா..*
விண்ணவர் ஆராதிக்கும்
*விடிவெள்ளியே வா..*
உலகினை ஒளியூட்ட
உத்தமராய் அவதரித்த
கிறிஸ்துவே எம் உள்ளத்தில்
*பிறக்க வா..*

**ஆக்கம் :**
**S. மிஸ்டிகா, கொழு - 13.**

# நத்தார் கவிதைகள்

## பாலன் பிறந்ததனால்

ஆதியிலே இருந்த வார்த்தையானவர்
இன்று பூமியிலே வந்து உதித்தாரே

பாரினில் மானிடர் பாவம் போக்க
பரிசுத்த பாலனாய் பிறந்தாரே

வழிதவறி சென்ற மந்தைகளை
நல்வழியில் நடத்த வந்தவரே

குழந்தை இவரின் மழலை மொழியிலே
ஆயிரம் அர்த்தங்கள் இருக்கின்றதோ!

ஆயிரம் மொழிகளை சுவைக்கையிலே
நம்மில் ஆனந்தம் வந்து சேர்ந்திடுமோ?

இன்பம் வந்து சொட்ட சொட்ட
துன்பம் எல்லாம் நீங்கி ஓட

மானிடனாய் மண்ணில் தோன்றினாரே
ஏழைகளின் தோழன் ஆனாரே

அமைதி வந்து சேர்ந்திடுமா,
சந்தோஷம் பூமியில் நிலைத்திடுமா

நிம்மதி எம்மில் நிறைந்திடுமா
இந்த ஏழைகளின் தோழன் பிறந்ததனால்

**ஆக்கம் :**
**P.M. மேரி பெனடிக்கா, பென்ரித் தோட்டம்.**
**புனித அந்தோனியார் வீதி, அவிசவாளை**

## ஏழ்மையில் உயர்வான மண்ணுலக தேவன்!

விடியலெங்கும் நட்சத்திரம் ஜொலிக்க
விண்மீன்கள் மகிழ்வுடன் கண்சிமிட்ட
விண்ணவர்கள் மகிழ்வுடன் இசைமழையில் மூழ்க
வினோதமாய் அவதரித்தார் மண்ணுலக தேவன்!

உடைந்த உள்ளத்திற்கு ஆறுதலாக ~ தம்
உறவை உலகினில் நிலைநாட்ட
உண்மையான அன்பை உயர்த்திட
உன்னதமாய் அவதரித்தார் மண்ணுலக தேவன்!

மண்ணில் வாழும் மாந்தர் யாவரும்
மாண்புடன் என்றும் சிறந்தோங்கி வாழ
மார்கழி குளிரில் மாட்டுத்தொழுவமதில்
மழலையாய் அவதரித்தார் மண்ணுலக தேவன்!

அலைபாயும் மனதிற்கு அமைதிதர
அகத்தில் என்றும் நிற்கும் ஒளியாக
ஆனந்த மழையில் மூழ்கச் செய்ய
அடைக்கலமாய் அவதரித்தார் மண்ணுலக தேவன்!

ஏற்றத்தாழ்வுகளை முற்றாக அழித்திடவே
ஏழையின் வாழ்விலும் புத்துயிர் அளித்திடவே
எளியவரின் துணையாக அவதரித்தார்
ஏழ்மையில் உயர்வான மண்ணுலக தேவன்!

**ஆக்கம் :**
**செ. வின்டன் ரொபின்சன்**

## நத்தார் பண்டிகை

மனிதனை படைத்த கடவுள் மனிதத்துவம்
அழிந்ததால் மனுவுருவெடுத்து வந்த
மகத்தான நாளிதுவே

விடியலை தேடிநின்ற விதியற்ற மாந்தருக்கு
விண்ணவரும் கீதம் பாட விரைந்திட்டார்
புவியிதற்கே

அரசர் ஒருவர் வேண்டுமென்று அகிலத்தோர்
காத்திருக்க அகர நகரமற்ற நம் இறைவன்
அதிசயமாய் வந்துதித்தார்

மாட்டு குடிலிலே உதித்ததால்
மானிட மகனானவர் மானிடர்க்கு
வெளியிட்டார் ஏழ்மையதன் மாண்பினையும்
சிறப்பினையும்

உலகமே கொண்டாடும் உன்னதரின்
விழாவினை உளத்தால் மகிழ்ந்து நாமும்
உன்னதமாய் கொண்டாடுவோம்

கேளிக்கை ஏதுமின்றி கேள்வி கேட்டு நம்
வாழ்க்கைதனை கேடயமாய் பயன்படுத்தி
பாவ கேட்டிதனை வென்றிடுவோம்

**ஆக்கம் :**
**பி. பயஸ், புனித ஆசீர்வாதப்பர் ஆச்சிரமம்,**
**இலுக்கேன, குளியாபிட்டிய.**

## கடவுளின் மகன் பாலகனாக!

ஆதாமின் பாவம் போக்க
அன்று ஒருநாள் பெத்தகேமில்
அன்னை மரி மகனான எங்கள்
ஆண்டவர் அவதரித்தார் அவனியிலே

ஊர் உறங்கும் வேளையிலே
உலகத்தை மீட்பதற்காய்
எங்கள் உத்தமர் பிறந்துவிட்டார்
ஊரெல்லாம் மகிழ்ந்து பாட

பாவிகள் என்றும் வாழ
பாவக்கறை அனைத்தும் போக்க
அன்றும் இன்றும் ஆண்டவராக
அன்பர் மெசியா பிறந்துவந்தார்

வானில் விண்மீன் ஒளிதரவே
இடையர் இன்புற்று பாடிடவே
ஆவியின் மகன் நானே என்று
அகிலமே ஆழ பிறந்துவிட்டார்

உலகம் போற்ற பிறந்த இயேசு
எம் உள்ளங்களில் பிறக்கவேண்டும்
இறைமகன் வழி நடந்தால்
இருள்போக்கி ஒளிதருவார்

**ஆக்கம் : என்டனி மேரி பெட்டிமா,**
**மாபேரியதன்ன, திகன**

## கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்

அன்பின் வடிவாய்
அருளை வழங்கிட மண்ணில்
உதித்த மாமன்னர் - இயேசு
விண்ணுலகில் இறைமகன்
மண்ணுலகில் புனித மகன்
மாண்புடன் மக்களை
மாசற்றவர்களாக மாற்றிட
இயேசு அவதரித்த - இந்த
இனிய நாளைக் கொண்டாடும்
இன்ப உள்ளங்களுக்கு
இதயம் கனிந்த கிறிஸ்மஸ்
வாழ்த்துக்கள்.

**ஆக்கம் :**
**G. பிரியதர்ஷினி, கொழு - 13.**

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயரான மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்களின் நத்தார்

**"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக"** என்று வானதூதர்கள் அன்று இயேசுவைப் புகழ்ந்தார்கள். பூவுலகிற்கு அமைதியைக் கொண்டுவந்த இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு விழாவை நாம் வருடா வருடம் கொண்டாடி வருகின்றோம். கிறிஸ்மஸ் என்பது அன்பின் விழா, பகிர்வின் விழா இப்படியான ஒரு கிறிஸ்து பிறப்பு விழாவைத் தான் எமது பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை நம் ஒவ்வொருவரையும் கேட்டு நிற்கின்றார்.

முதன் முதலில் கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தத்துடன் கொண்டாடியது நம் அன்னை மரியாதான். காரணம் தன்னையே இறைவனுக்கு அர்ப்பணமாக்கி அன்பின் வடிவமான ஆண்டவராகிய இயேசுவை இம்மண்ணுலகிற்குத் தந்தார்.

எமது கொழும்பு உயர் மறைமாவட்டம் இவ்வாண்டை மரியன்னையின் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. **"தேவதாயாரே எம்மை ஆண்டவரிடம் அழைத்துச் செல்லுமே"** என்ற மையப் பொருளில் இவ்வாண்டு முழுவதிலும் நாம் வாழ எமக்கு அழைப்பு விடுத்துள்ளது. நாம் இறைவனிடம் செல்ல அன்னை மரியாவே எமக்கு வழிகாட்டியாக இருக்கின்றார். ஆகவே மரியன்னையுடன் சேர்ந்து நாம் கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தத்துடன் கொண்டாடுவோம். எமது சமுதாயத்தில் வாழும் ஏழைகளோடும், துன்ப துயரத்தால் வாடும் மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அவர்களுக்கு தேவையானவற்றை பகிர்ந்து எளிமையான, அமைதியான, சமாதானமாக கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவோம்.

மரியன்னை ஆண்டில் மரியன்னையைப் போல் விசுவாசத்தை ஆழமாக்குவோம். அதையே நம் வாழ்வாக்குவோம். மரியன்னையின் பரிந்துரையையும் பாதுகாப்பையும் வேண்டி நிற்போம்.

அமைதியைக் கொண்டு வந்த நம் மீட்பராம் இயேசுக்கிறிஸ்துவின் அருளும் சமாதானமும் என்றும் உங்களை காத்து வழிநடத்துவதாக.

**உங்களுக்கு இனிய நத்தார் வாழ்த்துக்கள்.**

## "நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளார்" (எசா 9:6)

காலங்களை எல்லாம் கடந்த
பரம் பொருளே இறைவா.
காலம் நிறைவுற்ற போது உம் ஒரே திருமகனை
காரிருள் சூழந்து நடந்து வந்த
இம் மானிடர்க்காய்
கன்னிமரியின் உதரத்தில் மனுவுருவானாரே
நமக்காய்

வாழ்விழந்து வாடி நிற்கும் இம் மானிடர்க்காய்
வாழ்வளிக்கும் வள்ளலவர் வழியும், ஒளியும்,
வாழ்வுமாய்
வானதூதர் வாழ்த்தொலிக்க நல்மனத்தோர்க்கு
அமைதிபெற வானவர் போற்றும் மரியன்னையின்
மடியில் தவழ்ந்தாரே இயேசு பாலன்

தேடியே வந்த ஞானிகள் இடையர்கள்
தாள்பணிந்து வணங்கினரே
தேவாதி தேவன் இம்மானுவேலன் மெசியா,
மீட்பர், அமைதியின் மன்னரவர்
தேடுகின்றோம் தினம் வாடுகின்றோம்
உம் மறுவருகைக்காய்
தேடும் அன்புத் தெய்வ பாலகா! எம் இதயக்
குடிலில் வந்து பிறக்கமாட்டாயோ!



*சகோ. செ. தொபியாஸ்*
CMSF, *மாத்தளை*




# பாலகனுக்கு பாலகர் எமது கிறிஸ்மஸ் பரிசு

***ஆன்மாவின் மிகவும் இனிமையான பாலகனுக்கு,***

எங்கள் உயிரான இயேசுவே, உம்மை நாங்கள் அன்பு செய்கின்றோம். உம்மை அன்பு செய்கின்றோம் என்பதில் அல்ல. உம்மை மட்டுமே அன்பு செய்கின்றோம் என்பதில் தான் நாம் மகிழ்ச்சி கொள்கின்றோம். பதினாயிரங்களில் உன்னதமானவனும், சூரியனைவிட பிரகாசம் நிறைந்த எம்முடைய இயேசுவே, உம்மை அன்பு செய்யாமலிருக்க யாருக்குக் கூடும்?

உம் இதயத்தை எங்கள் இதயத்தோடு சேர்த்து இணைத்து இப்பெருநாளிலே நாங்கள் கூறுகின்றோம் "ஒரு காலமும் பிரியாத வகையில் நாங்கள் உம்மை அன்பு செய்கின்றோம்... இறுதி மூச்சு வரையிலும் இயேசுவே நாங்கள் உமக்குரியவர்கள்" என்று சத்தமிட்டு கூறுகின்றோம். உமது தாயும் எங்கள் இனிய அன்னையுமான மரியன்னை உம்மை அன்புசெய்தது போல நாங்களும் உம்மை நேசிக்கின்றோம். இயேசுவே, உமது தாய் உமக்காக மட்டுமே வாழ்ந்தவர் அதுபோலவே சிறுவர்களாகிய நாங்களும் உமக்காக மட்டுமே வாழ ஆசைப்படுகின்றோம்.... ஆனால் எப்படி? என்று மட்டும் தெரியவில்லை. உம்மை நேசிக்கவும், உம்மோடு கைபிடித்து நடக்கவும், உம்மை பார்க்கவும், உம்மோடு பேசவும் எங்களுக்கு உதவி செய்யும்படி உமது தாயிடம் எடுத்துச் சொல்வீரா?

அன்பு, கருணை, இரக்கம் பரிவு, ஆதரவு .... போன்ற நற்குணங்கள் மனித இதயங்களிலிருந்து மறைந்து கொண்டிருக்கின்றன. இருப்பினும் உமது பிறப்புவிழாவை கொண்டாட அனைவரும் தயாராகுகின்றனர். நட்சத்திர விளக்குகள், வாழ்த்து அட்டைகள், ஆடம்பர அலங்காரங்கள் போன்றவற்றால் அலங்-



கரித்து இவ்வுலகம் உம்மை நினைக்கின்றது. ஆனால் வறுமையிலும், ஏழ்மையிலும் வாடும் எங்களால் இயேசுவே உமக்கு எதைத் தரமுடியும் என்று சிந்திக்க வேண்டியதில்லை. ஏனெனில் ஏழை கைம்பெண்ணின் காணிக்கையை போன்றே எங்களிடமுள்ள எல்லாவற்றையும் நாங்கள் உமக்கு பரிசளிக்கின்றோம். எங்களையும் உமக்கு கையளிக்கின்றோம். தன்னை தேடுவோர்க்கும், தனக்காக காத்திருப்போருக்கும் கடவுள் நல்லவராக இருக்கின்றார். எங்கள் இதயமும் உம்மை தேடுகின்றது. எம்மீது இரக்கம் வைத்து எங்களை மீட்க மறுபடியும் பிறந்து வருவீரா?

இவ்வுலகம் தன்னலம் மட்டுமே நிறைந்ததாக இருக்கின்றது. இங்கு அன்பு இல்லை, பாசம் இல்லை, அரவணைப்பு இல்லை, உதவியும் இல்லை. இவற்றிக்காக ஏங்கும் எங்கள் மத்தியில் இயேசுவே பிறந்து வாரும். எங்களை அன்பு செய்ய, அரவணைக்க, எம்மோடு விளையாட எப்போது வருவீர். எம் அன்புப் பரிசுடன் நாங்கள் உம்முடன் இணைந்திருக்கின்றோம்.

**என்றும் உம்**
**அன்புப் பாலகர்கள்.**

## குட்டீஸின் நத்தார் பரிசு...



அபினி கல்னாய்டு



A. அன்ரு ரெயன்
லிற்றில் லாம் பாலர் பாடசாலை.
புனித லூசியா வீதி. கொழு - 13.



அ. மதுமிகா. தரம் - 7.
நல்லாயன் மகளிர் மகா
வித்தியாலயம். கொழு - 13.





R. டினோஷா. தரம் - 4TS. புதுக்கடைப் பங்கு

Merry Christmas

# சத்திரத்தில் இடமில்லை என் அறையில் இடமிருக்கிறது



மார்கழி என்றாலே கிறிஸ்து பிறப்பு விழாவும், அதற்குரிய தயாரிப்புக்களுமே நம் கண்முன் வரும். புதிய ஆடைகள், வாழ்த்து அட்டைகள், வகை வகையான பலகாரங்கள்... என நாம் குதூகலிக்கும் மாதம் இது. அத்துடன் இந்த ஆண்டு முடிவடையும் மாதம். இந்த ஆண்டிலே இறைவன் செய்த அனைத்து நன்மையான காரியங்களுக்கு நன்றி செலுத்தி, இனி வர இருக்கும் ஆண்டிலும் இறையருளின் துணையை நாடுவோம்.

ஒரு முறை ஒரு பள்ளியில் நடந்த கிறிஸ்மஸ் விழா நாடகத்தில் சத்திரக் காப்பாளராக நடிக்கும் சிறுவனிடம் அன்னை மரியாவும், சூசையப்பரும் வந்து சத்திரத்தில் இடம் கேட்கும் போது "இடமில்லை" என இருமுறை கூறும்படி வசனம் கொடுக்கப்பட்டது. நாடகம் ஆரம்பமானது அப்போது காப்பாளனாக நடித்த சிறுவன் முதலில் சத்திரத்தில் இடமில்லை என இருமுறை கூறிவிட்டு பின்னர் உணர்ச்சிப் பெருக்குடன் என் வீட்டில் என் அறையில் இடமிருக்கிறது வாருங்கள் என்றுரைத்தானம். நாடகம் பார்த்தவர்கள் இன்ப அதிர்ச்சிக்கு உள்ளாயினர். இதேபோன்ற ஆத்மார்த்த அன்பு நம் இதயத்தின் ஆழங்களிலும் பதியவேண்டும்.

கிறிஸ்மஸ் - இறைவன் தன் அன்பைப் பகிர்ந்தளித்த நாள். இறைமகன் இயேசுக்கிறிஸ்துவை நமக்காக நம் மீட்புக்காக பகிர்ந்தளித்த நன்னாள். இந்நாளில் இந்த சிறுவன் தன் அறையை சூசை மரியாளுக்கு பகிர்ந்தளிக்க முன் வந்தது அவனின் பெருந்தன்மையே. இத்தகைய பெருந்தன்மை "பகிர்தல்" நம்மில் நிறைய இறைமகன் குழந்தை இயேசுவிடம் சிறப்பாக மன்றாடுவோம். கிறிஸ்து இயேசு பிறந்த நாள் அன்பின் பகிர்வு நாள். நாமும் நம் அன்பையும், மகிழ்ச்சியையும் பிறருடன் பகிர்ந்து இவ்விழாவினைக் கொண்டாடுவோம்.



# குழந்தைகளே!



- ✯ சிறுவர்களாகிய நீங்கள் புல்லாங்குழல் போல் வெறுமையாகவும், அதே வேளையில் இனிய மெல்லிசை மீட்டும் குழலாகிடுங்கள்!
- ✯ புல்லாங்குழலில் உட்புகும் காற்று இசையை தருவது போல் நீங்கள் சுவைத்திடும் இறைவார்த்தை உங்கள் வாழ்வில் வசந்தத்தை வழங்கட்டும்
- ✯ இறைவார்த்தையின் வழி வாழ்வு என்பதை அனுதினமும் படித்திடுங்கள்! அதன் பலனாக உங்களது உள்ளத்தை ஊடுருவிய எதிர்மறை எண்ணங்களை அகற்றிடுங்கள்!
- ✯ கிறிஸ்து பிறப்பு பெருவிழா உங்கள் வாழ்வில் மழலை மன்னவன் வந்திருக்க உமது இதயங்களை விசாலமாக திறந்து வையுங்கள்!
- ✯ நீர் சிறுவர்கள், சமுதாயத்தில் வாடிடும் மழலையர் விடுதியை நாடி சென்றிடுங்கள். உங்களுடைய சிறிய பரிசினை அவர்களோடு பகிர்ந்திடுங்கள்! அவர்களும் எமது தம்பி தங்கையரே! என்பதை உணர்ந்திட அழைக்கின்றது.! பகிர்ந்திட அழைக்கின்றது வாருங்கள் குழந்தைகளே!
- ✯ அனாதை விடுதிகளை கண்டையுங்கள்! அங்கே மழலை மன்னவன் இயேசு பாலன் அவர்கள் மத்தியில் தன் பிஞ்சு கரங்களை அசைத்து வரவேற்கின்றார்.

# நத்தார்

நத்தார் தினம் எனப்படுவது இயேசுவின் பிறப்பாகும். 2000வருடங்களிலும் மார்கழி மாதம் 24ம் திகதி இரவு 12.00 மணிக்கு இயேசு பிறந்தார் என்று நாம் மகிழ்ச்சியுடன் இத்தினத்தை கொண்டாடுகின்றோம். நாம் அனைவரும் உலககாரியத்தை பின்பற்றி உலககாரியத்திற்கு பொருத்தமான உடைகள், அலங்காரங்கள் ஆகியவற்றை பின்தொடர்ந்து செல்கின்றோம். அதேபோன்று மதுபான கடைகளிலும் ஏனைய வியாபார ஸ்தலத்திலும் இயேசுவின் நாமத்தை 'Happy Xmas" என்று வாழ்த்துவார்கள். இயேசு பிறந்த இடம் மாட்டுத்தொட்டியில் அவருக்கு உடையும், இருப்பிடமும் இருக்கவில்லை. எம் உள்ளத்தில் இயேசுவிற்கு பிறக்க இடமில்லை ஏனென்றால் எம் உள்ளத்தில் உலககாரியங்கள் நிறைந்துள்ளன. நாம் மற்றவர்களுக்குள் இயேசுவை பிறக்க வைக்கின்றோமா? என்று எம் உள்ளத்தை ஆராய்ந்து பார்ப்போம். அன்பின் சகோதர சகோதரிகளே! இந்த நத்தார் தினத்தில் இயேசுவின் பிறப்பில் இயேசுவைக் காண இயலாதவர்களுக்குள் இயேசுவை பிறக்க வைப்போம். எப்பொழுதும் உண்மையான நத்தாரை கொண்டாடுவோம்.

**ஆக்கம் :**
**J.D. எண்ஜலினா, தரம் – 6,**
**கத்தோலிக்க பாலர் இயேசு**
**கன்னியர் மடம், இரத்தினபுரி,**
**[சதாசகாய மாதா**
**மறைப்பாடசாலை, பரக்கடுவ]**

# அன்பின் மகிழ்ச்சி






அரையாண்டு தேர்வு முடிந்து ஒரு நாள் கழிந்தது. 23ம் திகதி ஞாயிறு திருப்பலிக்கு சென்று திரும்பிய இம்மானுவேல் காலை சிற்றுண்டி அருந்திய பின் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து தெருவில் நடப்பதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆட்டோ சத்தம் கேட்டு உற்றுப் பார்த்தான். பக்கத்து வீட்டுக்கு பீட்டரின் மாமா, அத்தை, பிள்ளைகள் வந்து இறங்கினார்கள். “ஓ! கிறிஸ்மஸ்க்கு வந்து இருக்கிறார்கள் போலும்” என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றி மறைந்தது. இரண்டு வீடுகள் தள்ளி அவனுடன் படிக்கும் பிரான்சிஸ் வீடு இருந்தது. பிரான்சிஸ் தனது வீட்டிற்கு விடுமுறைக்கு தனது உறவினர்கள் வருவார்கள் எனச் சொன்னது ஞாபகம் வந்தது. என்ன ஆச்சரியம்! சிறிது நேரத்தில் அங்கும் ஓர் ஆட்டோ வந்து நிற்க, பிரான்சிஸ் வீட்டிற்கும் விருந்தினர்கள் வந்து இறங்கினார்கள்.

இம்மானுவேல் சலிப்புடன் ஹாலுக்கு வந்தான். அங்கு அப்பா செய்தித்தாளில் மூழ்கி இருந்தார். “டாடி, டாடி நம்ம வீட்டுக்கு யாருமே வருவதில்லை. ஒவ்வொரு தடவையும் நீங்க, அம்மா, நான் தான் கிறிஸ்மஸ் மரம் குடில் ஜோடித்து ஒவ்வொரு கிறிஸ்மசையும் கொண்டாடுகிறோம். எனக்கு ரொம்பவும் போர் அடிக்குது”

“என்னடா செய்ய. உன் நண்பர்களுக்கு இருப்பது போல உனக்கு அத்தை, மாமா, சித்தி, சித்தப்பா என யாருமே இல்லையே? அதனாலே நமக்கு கிறிஸ்மஸ்க்கு விருந்தாளியாக யாரும் வருவதில்லை” என சமாதானப்படுத்தினார். சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்த இம்மானுவேல் “எப்படி இந்த வருடம் மாறுபட்ட விதமாக கொண்டாடலாம்” என திட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அவனுக்கு சகாய பாஸ்கர, அன்னமேரி, கிறிஸ்டோபர், லீயோனா, தேவசகாயம் போன்ற தனது வகுப்பில் படிக்கும் நண்பர்களின் நினைவு வந்தது. அவர்கள் எல்லாம் அருட்சகோதரிகள் நடத்தும் “சகாய அன்னை அனாதை ஆச்சிரமத்தில்” தங்கிக் கொண்டு தன்னுடைய வகுப்பில் படிப்பது ஞாபகத்திற்கு வந்தது. அவர்களுக்கெல்லாம் கிறிஸ்மஸ்க்கு யார் புதுசட்டை, உடைகள் வாங்கிக் கொடுப்பார்கள்? எங்கே போவார்கள்? என்ற கேள்வி அவன் மனதில் காட்டாறு போல் ஓடிக் கொண்டு இருந்தது. “டாடி, டாடி எனக்கு ஒரு ஐடியா தோணுது நம்ம ஏன் என் நண்பர்களைக் கூட்டி கிறிஸ்மஸ் கொண்டாடக் கூடாது”

“எந்த நண்பர்கள்?”

“அதுதான் அப்பா சகாய அன்னை ஆச்சிரமத்திலுள்ள என் நண்பர்கள் அவங்க எல்லாம் கிறிஸ்மஸ்க்கு எங்கே போவாங்க?” புது டிரஸ் யார் வாங்கிக் கொடுப்பார்?” “உம் ... நல்ல ஐடியா தான்.. சரி வா அந்த சிஸ்டரைப் போய் பார்த்து பேசலாம். புறப்படு.. இந்த வருடம் புது மாதிரியாக கிறிஸ்மஸ் கொண்டாடுவோம்... வா”

24ம் திகதி இரவு இம்மானுவேலும், அவனது நண்பர்களும் அவனுடைய அப்பா வாங்கிக் கொடுத்த புது உடைகளையே அணிந்து கொண்டு நள்ளிரவு திருப்பலிக்குப் போக தயாரானார்கள். வீட்டில் எல்லோரும் மகிழ்ச்சியுடன் அங்கும், இங்கும் ஓடி கிறிஸ்மஸ் மரம், குடில் என எல்லாம் சிறப்பாக அலங்காரம் செய்தார்கள். அவனின் அம்மா பலவிதமான பலகாரங்கள் செய்வதில் மும்முரமாக இருந்தார்கள். இம்மானுவேல் நண்பர்களை தாங்கள் அனாதை என்பதை மறக்கச் செய்து எல்லோரும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகள் போல் உணரச் செய்தான். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி, நள்ளிரவு திருப்பலியில் எல்லோரும் கலந்து கொண்டார்கள். அவர்களைப் பார்த்த அருட்சகோதரிகள் அகமகிழ்ந்தனர்.

திருப்பலியில் “இயேசு பாலன் நம்மிடையே பிறக்கக் காரணம் அவர் நம்மேல் கொண்ட அன்பு தான். அந்த அன்பையும் நமது செல்வத்தையும் இல்லாதவர்களிடம் பகிர்ந்து கொள்ளுவது தான் சிறந்த நடைமுறை கிறிஸ்மஸ் கொண்டாட்டம். இதுதான் இன்றைய நற்செய்தியின் கருத்து” என குருவானவர் மொழிந்தார். இம்மானுவேலின் புதிய எண்ணத்தை தனது மனதுக்குள்




# “புனிதம் ஒன்று மனிதனான நிகழ்வே கிறிஸ்மஸ் பெருவிழா”



அகில உலக மக்களாலும் எதிர்பார்க்கப்பட்ட மெசியாவின் பிறப்பு விழாவை இன்று கிறிஸ்மஸ் பெருவிழாவாக கொண்டாடுகின்றோம். முதல் 300 ஆண்டவளவாக கிறிஸ்தவர்கள் உயிர்ப்புப் (ஈஸ்டர்) பெருவிழாவைத்தான் ஒரே திருவிழாவாக கொண்டாடினார்கள். முதல் முறையாக கி.பி. 336ல் தான் கிறிஸ்மஸ் பெருவிழா கொண்டாடத் தொடங்கப்பட்டது. மார்கழி 25ம் திகதியை உரோமைய மன்னர்கள் சூரியக் கடவுளை வழிபாடு செய்யுமாறு திருவிழாவாக அமைத்துக் கொண்டார்கள். இந்த நாளை கிறிஸ்து மையமாக்கி கிறிஸ்து உலகின் உண்மையான ஆதவன் (ஒளி) என்று குறிக்கும் வண்ணம் இவ்விழா உரோமையில் நிறுவப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்மஸ் பெருவிழாவை மகிழ்வுடன் கொண்டாடி வருகின்றோம்.

ஆண்டுதோறும் கிறிஸ்மஸ் பெருவிழாவை கொண்டாடி மகிழும் நாம் கிறிஸ்து பிறப்பின் மூலம் நமக்கு கிடைக்கும் செய்தியை உணர்ந்திருக்கின்றோமா? அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடுகின்றோமா? என்றால் அது கேள்விக்குரிய விடயமாகும். காரணம் இப்பிறப்பு விழாவிற்கு முன்னதாக இந்த மனுவுருவான நிகழ்வினை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆதியிலே ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தின் விளைவாக, மன்னிக்கும் குணம் கொண்ட நம் தந்தை அவர்களை பாவ உலகிலிருந்து மீட்க ஒரு மீட்பரை அனுப்புவதாக வாக்களித்தார். பிற்காலத்தில் அந்த மீட்பர் அகில உலகை ஆளும் அரசராக இருப்பார் என்ற எண்ணம் இஸ்ரயேல் மக்கள் மத்தியில் நிலவியது. காரணம் இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்த போது அவர்களை மீட்க விடுதலையின் அரசர் வருவார் என்ற எண்ணம் தோன்றி, மெசியாவின் பிறப்பை எதிர்பார்த்தனர். இவ்வேளையில் தான் இறைவனின் கருவியாக செயல்பட்ட இறைவாக்கினர்கள் எசாயா, எரேமியா, எசேக்கியேல், மீக்கா, செக்கரியா போன்றோர் இயேசுவின் பிறப்பை முன்னறிவித்தனர். இத்தகைய முன்னறிவிப்புக்களின் மத்தியில்,

1. *மெசியா தாவீதின் கோத்திரத்தில் பிறப்பார்*
2. *மக்களை நீதியுடன் ஆட்சி செய்வார்*
3. *அவரது ஆட்சிக்கு முடிவே இராது*

என்று அறிவித்த இவர்கள் வல்லமை உள்ள இறைவன், அமைதியின் அரசர், என்றுமுள தந்தை, வியத்தகு ஆலோசகர் என்று மெசியாவிற்கு பல பெயர் கொடுத்து அவரின் பிறப்பை பற்றியும், அவரது நீதியான ஆட்சியை பற்றியும் எடுத்துரைத்தார்கள். இவ்வாறு இறைவனின் மீட்புத்திட்டம் செயல்பட்ட விதத்தை காணலாம். என்றாலும் இறைவன் யார் வாயிலாக தம் மீட்புத்திட்டத்தை வெளிக்காட்டுவார் என்பதை நாம் அறிய முடியாதவர்களாக இருக்கின்றோம். தம் மகனை இவ்வுலகில் ஈன்றெடுக்க ஒரு அன்னையை தெரிந்தெடுக்கின்றார். அந்த அன்னை வாயிலாக முன்குறித்த மீட்பை நிறைவேற்றுகின்றார். அவருக்கு துணையாக நீதிமானாகிய சூசையப்பரை தெரிவு செய்கின்றார். கபிரியேல் தூதரால் மங்கள வார்த்தை கூறப்பட்ட நம் அன்னை, தூய ஆவியின் துணை கொண்டு இயேசுவை கருத்தரித்தார். இயேசு மாளிகையிலோ அல்லது அவருக்காக முன்குறிக்கப்பட்ட இடத்திலோ பிறக்கவில்லை. இயேசுவை பெற்றெடுக்க இடம்தேடி அலைந்தும் கிடைக்காத நிலையில் இறுதியாக மாட்டுத்தொழுவத்தில் இயேசுவை பெற்றெடுத்தார். ஆதியிலே ஆண்டவர் வாக்களித்தது ‘*வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்*’ என்பது போல தாவீது கோத்திர அரசராக எளிமையின் மீட்பராக பிறக்கின்றார். அந்த புனிதமான வார்த்தை மனிதனான நிகழ்வையே நாம் கிறிஸ்மஸ் பெருவிழாவாக கொண்டாடுகின்றோம்.

இயேசுவின் பிறப்பையும் அவரது இரண்டாவது வருகையையும் எதிர்பார்த்து திருவருகைக்காலத்தில் எம்மை தகுந்த விதத்தில் ஆயத்தம் செய்த எமக்கு கிறிஸ்து பிறப்பு விழா மகிழ்வையும் எதிர்பார்ப்பையும் தருகிறது. காரணம் கிறிஸ்து பிறப்பின் செய்தி முதலில் இடையர்களுக்கே அறிவிக்கப்பட்டது. எனினும் இடையர்கள் நம்பிக்கையுடனும் சுயவிருப்புடனும் இறைவனை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் கடவுளைப் பற்றி கேட்ட யாவற்றையும் புகழ்ந்து பாடி வாழ்த்தினார்கள். இது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஏற்பட்ட நத்தாரை வெளிப்படுத்துகின்றது. மிகவும் வருந்தி உழைத்து ஆடுகளை மேய்த்து வந்த இடையர்களுக்கு வானதூதரின் செய்தி மகிழ்ச்சியின் விழாவாக அமைகின்றது. இதுவே இன்று எமக்கு கிடைக்கும் செய்தியாக இருக்கின்றது. இறைவனை சுயவிருப்புடன் ஏற்றுக்கொள்ளும் போது எமது கோபம், வைராக்கியம், பொறாமை, துன்பம், பிரச்சினை யாவும் தூர விலகிச் செல்கின்றது. இந்நிலையிலிருந்து விடுபடாமல் வாழும் போது இறைவனை நாம் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றோம். அன்பும் சகோதரத்துவமும் நம்மில் மலரும் போது நாம் ஒரே குடும்பமாக ஒன்றுபட்ட வாழ்க்கையை வாழ எமக்குத் தூண்டுகின்றது. ‘*பூவுலகில் நல் மனத்தோருக்கு அமைதியும் உண்டாகுக*’ என்று வானதூதர் போற்றியதை நாம் நினைவிற் கொள்ளும் போது எமது வாழ்வும் கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

புனிதம் ஒன்று மனிதனான விழாவை கொண்டாடும் நமது பெருவிழா இறைவனின் அன்பையும் சகோதரத்துவத்தையும் மகிழ்வையும் எடுத்துரைக்கின்றதா? அவரது உண்மையான கிறிஸ்து பிறப்பு விழாவை உலகிற்கு எடுத்துக் காட்டும் விழாவாக அமைகின்றதா? சிந்திப்போம்!.. கிறிஸ்மஸ் குடில் அமைத்து மரம் வைத்து கொண்டாடினால் மட்டும் அது கிறிஸ்மஸ் பெருவிழாவாக மாறாது. மாறாக உண்மையான மனமாற்றத்துடன் பிறரை ஏற்றுக்கொண்டு நாம் சகோதர அன்புடனும் ஒற்றுமையுடனும் கொண்டாடும் போதுதான் அது உண்மையின் விழாவாக மாறும். இன்று நம் நாட்டில் இனம், மதம், மொழி போன்றவற்றினால் பல வேறுபாடுகளும் ஒற்றுமையில்லாத் தன்மையும் காணப்படுகின்றது. பல்லின மக்கள் வாழும் நம் நாட்டில் கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் விழா கிறிஸ்து கொணர்ந்த அமைதியையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். அப்போது தான் அது கிறிஸ்துவின் பிறப்பு விழாவாக மாறும்.

எனவே உண்மையான மனமாற்றத்துடன் எம் உள்ளங்களில் அன்பை ஏற்று இறைமனித உறவை கட்டியெழுப்ப நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் விழா எம் இதயக் கதவுகளை திறப்பதாக. உலகிற்கு ஒளியாக வந்த இயேசு பாலன் எம் இல்லங்களிலும், உள்ளங்களிலும் அமைதி அருள்வாராக. உங்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான கிறிஸ்மஸ் பெருவிழா வாழ்த்துக்கள். இறையாசீர் என்றும்.

அன்பினில் பிறந்தவனே அருமைத்
திருமகனே!
என் வீட்டு பேரொளியை ஏற்றவந்த
திருவிளக்கே!
இன்பத் திருநாளே இஸ்ரயேலில்
வரும் வரைக்கும்
கண்மூடித் தூங்கிடுவாய் காலமுந்தன்
கையினிலே

*(இயேசு காவியம்)*

**இவண்,**

**பெ. டிலோய்ட்சன் பெர்ணாண்டோ**

**இறையியல் 3ம் ஆண்டு**




# ஆண்டவரே பேசும்

அருட்பணி. பிலிப் I.V. Dei





## உலகம் படைக்கப்பட்ட போது இருந்தேன். [யோவா 1:2]

உலகம் உண்டாக்கப்படுமுன் நான் வானகத் தந்தையோடு தொடக்கமின்றி இருந்து வருகின்றேன். என்னைப் பற்றியே யோவான் தன் நற்செய்தியில் “அவர் கடவுளோடு இருந்தார்” என்று குறிப்பிடுகின்றார். நான் வானகத் தந்தையின் ஒரே மகனாகத் தொடக்கமின்றி இருந்து வருவதால், அவர் உலகைப் படைத்தபோது நானும் அவரோடு இருந்தேன்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**



## ஆபிரகாமுக்கு முன்னதாகவே இருக்கின்றேன் [யோவா 8:58]

ஆபிரகாம் இஸ்ராயேல் குலத்தாரின் முதுபெரும் தந்தை. இவர் கி.மு 2000 ஆண்டவளவில் வாழ்ந்தார். இவரோடுதான் உலகின் வரலாறு ஆரம்பமாகிறது. இவர் பிறக்குமுன்னரே நான் வானகத் தந்தையோடு தொடக்கமின்றி இருந்து வருகின்றேன். இதனாலேயே நான் வரலாறு தொடங்கும் முன்னரே வரலாறு படைத்துவிட்டேன். இவ்வாறு நான் ஆபிரகாமுக்கு முன்னதாகவே இருக்கிறேன்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**

## என் அவதாரத்தை வானதூதர் வழியாக அறிவித்தேன். [லூக் 1:31]

நான் வரலாற்றில் மனிதனாகப் பிறக்கவேண்டிய காலமும், நேரமும் வந்தபோது கபிரியேல் என்ற வானதூதர் வழியாக என் மனித அவதாரத்தை நாசரேத்தில் வாழ்ந்து வந்த மரியாவுக்கு அறிவித்தேன். மெசியாவாகிய நான் மாளிகையில் மன்னனாகப் பிறப்பேன் என்று இஸ்ராயேல் மக்கள் எல்லோரும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள். இவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக, நான் ஒரு ஏழையாய் மனித அவதாரம் எடுத்தேன்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**



## தூய ஆவியாரால் கருவானேன் [லூக் 1:35]

கபிரியேல் வானதூதருக்கு மரியா ஒப்புதல் வழங்கியதும், தூய ஆவியார் அவர்மேல் இறங்கினார். அப்போது அவர் தன் வல்லமையால் மரியாவின் உடலையும், இரத்தத்தையும் கொண்டு என்னை அவரின் உதரத்தில் கருவாக உருவாக்கினார். நான் ஆண்கலப்பு இல்லாமல் வியப்புக்குரிய முறையில் மனிதனானேன். அப்போது என் தாய் மரியா தன் கன்னிமை கலையாமல் என்னைக் கருத்தாங்கினாள்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**

## மரியாவின் தலைமகனாகப் பிறந்தேன். [லூக் 2:7]

என் தாயின் வயிற்றில் நான் அவரின் மகனாக உருவானபோது, அவர் எனக்கு முன்னரோ அல்லது பின்னரோ வேறு எவரையும் பெற்றெடுக்கவில்லை. அவர் தன் புனிதமான கன்னிமைக்குப் பழுதில்லாமல் என்னைப் பெற்றெடுத்தார். நான் மட்டுமே அவருக்கு முதல் மகனும், ஒரே மகனுமாக இருந்ததால், அவரின் தலைமகன் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டேன்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**

## ஆதாமின் மகனாகப் பிறந்தேன். [லூக் 3:38]

வானகத் தந்தை, உலகில் உள்ள அனைத்தையும் படைத்தபின், இறுதியாகத் தன் சாயலாக ஆதாமையும், ஏவாளையும் முதல் மனிதர்களாகப் படைத்ததார். இவர்கள் வழியாகவே மனித இனம் பூமியில் பலுகிப் பெருகியது. ஆதாமின் வழிமரபில் நானும் மனிதனாகப் பிறந்ததால், ஆதாமின் மகனாக இருக்கிறேன். ஆதாமைப் படைத்த நான், அவருக்கே மகனாகப் பிறப்பது ஒரு மறைபொருளே.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**



## ஆபிரகாமின் மகனாகப் பிறந்தேன். [மத் 1:1]

வானகத் தந்தை ஆபிரகாமை ஊர் என்ற மத்திய கிழக்கு நகர் ஒன்றில் இருந்து புறப்படச் செய்து, பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டுக்கு அழைத்து வந்தார். அங்கே அவரை எபிரேய மக்களின் முதுபெரும் தந்தை ஆக்கினார். அவரது வழிமரபில் நானும் ஒரு எபிரேயனானப் பிறந்தேன். இதனால் நான் ஆபிரகாமின் மகனாக இருக்கிறேன். எனக்காக என் தந்தை தெரிந்தெடுத்த இனமே எபிரேய குலம்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**

## தாவீதின் ஊரான பெத்லகேமில் பிறந்தேன். [லூக் 2:11]

பெத்லகேம் தாவீது அரசருடைய புனித நகரம். என் வளர்ப்புத் தந்தை யோசேப்பு தாவீது அரசரின் குடும்பத்தில் உதித்தவர். என் மனித அவதாரத்தை மக்கள் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது என்று, அவர் யோசேப்பை என் வளர்ப்புத் தந்தையாகத் தெரிந்தெடுத்தார். நான் யோசேப்பின் பெயர் தாங்கிப் பெத்லகேமில் பிறந்ததால், தாவீது அரசரின் மகனாகவும், யூதரின் அரசனாகவும் இருக்கிறேன்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**



## மாட்டுத்தொழுவத்தில் பிறந்தேன். [மத் 2:2]

செல்வந்தர்களின் குழந்தைகள் மாளிகைகளில் பிறக்கிறார்கள். மாட்டுத்தொழுவத்தில் பரம ஏழைகளின் குழந்தைகளே பிறக்கிறார்கள். என் தாயும், வளர்ப்புத் தந்தையும் என் பிறப்புக்காக ஊரெல்லாம் இடம் தேடி அலைந்து, எங்கேயும் இடம் கிடைக்காமல், மாட்டுத் தொழுவத்தை நாடினார்கள். நான் அங்கே பரம ஏழையாகப் பிறந்தேன். என் தாய் என்னைப் பழைய துணிகளால் சுற்றித் தன் மடியில் வைத்திருந்தார். இதுவே என் பிறப்பின் நிலையாக இருந்தது.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**

## அகஸ்துஸ் பேரரசரின் காலத்தில் பிறந்தேன். [லூக் 2:1]

உரோமைப் பேரரசைப் பல மன்னர்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சி செய்தார்கள். இவர்களின் வரிசையில் வந்தவர்களுள் அகஸ்துஸ் சீசரும் ஒருவர். இவர் தன் ஆட்சிக் காலத்திலே மக்களின் கணக்கெடுப்புக்காக உத்தரவிட்டார். என் தாயும் வளர்ப்புத் தந்தையும் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்ய பெத்லகேம் ஊருக்குப் போனார்கள். மக்கள் கணக்கெடுப்பின்போது நான் பிறந்ததால், உலக வரலாற்றில் என் பிறப்பு பதிவானது.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**



## ஏரோது யூதேயாவை ஆட்சிசெய்தபோது பிறந்தேன். [மத் 2:1]

உரோமைப் பேரரசின் நிலப்பரப்பு பல சிறய மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. யூதேயா இவற்றுள் ஒன்று. யூதேயாவைப் ஏரோது என்ற சிறிய மன்னன் ஆட்சிசெய்தபோது, இவனின் ஆட்சிக் காலத்திலேயே நான் யூதேயாவில் பிறந்தேன். நான் யூதரின் அரசன் என்பதற்காக, இவனே என்னைக் கொலை செய்யத் தேடியவன். இதனால் என் பிறப்பு வரலாற்றில் இன்னும் துல்லியமாகப் பதிவாகிவிட்டது.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**

## தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டேன். [லூக் 2:12]

செல்வர்களின் குழந்தைகள் விலை மதிப்பில்லாத் தொட்டில்களில் தாலாட்டப்படுகிறார்கள். ஏழைகளின் குழந்தைகளுக்கும் வசதியான தொட்டில் கிடைக்கும். ஆனால் எனக்குக் கிடைத்ததோ தீவனத் தொட்டிதான். விண்ணகத்தில் கடவுளாயிருந்த நான் என் கடவுள் நிலையில் இருந்து இறங்கி, மண்ணகத்தில் வாழும் பாவி மனிதருக்காக இந்த ஏழைக் கோலத்தை ஏற்றுக் கொண்டேன்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**

## இடையருக்கே என் பிறப்பை முதலில் அறிவித்தேன். [லூக் 2:11]

எருசலேமுக்குப் பெயர் பதிய வந்தவர்கள் எல்லோரும் பணக்காரராயும், பெருமை பிடித்தோராயும் இருந்தார்கள். இவர்கள் தங்கள் செருக்கால் எனக்கு எட்டாத தூரத்தில் இருந்ததால், நான் என் பிறப்பை இவர்களுக்கு அறிவிக்கவில்லை. எருசலேமின் சுற்றுப்புறங்களில் மந்தை மேய்ந்துக் கொண்டிருந்த இடையர்களோ ஏழைகளாகவும், எளியோராகவும் இருந்ததால், இவர்களுக்கே என் பிறப்பை முதலில் அறிவித்தேன்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**



## வெளி உலகுக்கு என் பிறப்பை அறிவித்தேன். [மத் 2:11]

நான் பிறந்தபோது வானத்தில் ஒரு அதிசய வெள்ளியைக் கீழைத்தேய நாடுகளுக்குமேல் தோன்றச் செய்தேன். அந்நாடுகளில் வாழ்ந்து வந்த கஸ்பார், வெலிச்சோர், பல்த்தசார் என்ற மூன்று ஞானிகள் இதைக் கண்டார்கள். இதன் வழிகாட்டலில் இவர்கள் என்னைச் சந்திக்கப் பெத்லகேமுக்கு வந்தார்கள். இவர்கள் வழியாக என் பிறப்பின் நற்செய்தியை கீழைத்தேய நாடுகளில் உள்ளோர்க்கும் அறிவித்தேன்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!**

தொடரும்.....

# மாசில்லாக் குழந்தைகள் விழா









## பணமா பெரிது? நம் குழந்தை அதை விட மதிப்பு வாய்ந்தவன் அல்லவா? [தோபித்து 5:19]

வரலாறு குறித்து வைத்துள்ள கொடூரமான அரசர்களுள் ஒருவன் ஏரோது. பதவி வெறி பிடித்த ஏரோது பதவி பறிபோய் விடுமோ என்ற பதபதைப்பில் தம் காலத்தை கடத்தி வந்தான். தன் குடும்பத்தினர், தன் மீது அன்பு செலுத்தியவர்கள் அனைவரையும் தனது ஆட்சியை பறிக்க காத்திருக்கும் கழுகுகள் என்ற எண்ணத்துடனே நோக்கினான். அதற்காக தன் குடும்பத்தினரை கொலை செய்யும் அளவிற்கு துணிந்தான். கி.மு 35இல், தமது மைத்துனரை எரிக்கோவில் உள்ள குளத்தில் மூழ்கடித்து ஏரோது கொன்றான். கி.மு 34இல் தம் சகோதரன் யோசேப்பைக் கொலை செய்தான் கி.மு 29இல் மனைவி மரியம்னே, சில மாதங்களுக்குப் பிறகு தாய் அலெக்சாந்ரா மற்றும் கி.மு 25இல் மற்றொரு மைந்துனர் காஸ்டோபர் ஆகியோரின் உயிரைப் பறித்தான். கி.மு நான்காம் ஆண்டு தான் தற்கொலை செய்து கொள்வதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு தம் மற்றொரு மகன் அந்திபாடர் என்பவரின் வாழ்வையும் முடித்தான். இதனால் “ஏரோது வீட்டில் மகனாக இருப்பதை விட, பன்றியாக இருப்பது மேல்” என்று அகஸ்து சீசர் சொன்னார்.

இந்த பாதகனின் ஆட்சியில் யூதேயாவில் உள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். யூதர்களின் அரசர் பிறந்துள்ளார் என்பதை அறிந்த ஞானிகள் மூவரும் அவரைத் தேடி புறப்பட்டார்கள். சிங்கத்தின் குகைக்குள் நுழைந்தார்கள். போட்டி அரசன் வந்துவிடக் கூடாது என்று வெறிக்கொண்டு அலைந்த ஏரோதுவிடம் சென்று “எந்த இடத்தில் மீட்பர் பிறந்திருக்கின்றார்” என்று கேட்டார்கள். பதறிய எரோது எல்லா தலைமைக்குருக்களையும், மக்களிடையே இருந்த மறைநூல் அறிஞர்களையும் கூட்டி மெசியா எங்கே பிறப்பார் என்று விசாரித்தார்.

மெசியா பிறக்கும் இடம் பெத்லகேம் என்று உறுதியானவுடன் ஞானிகளை தனியே அழைத்து வந்து நாடகம் ஆடினான். தானும் அவரை வணங்க வேண்டும் எனவே அவரைப் பற்றி திட்டவட்டமாக எனக்குத் தெரிவியுங்கள் என்றார். வாஞ்சையும், விஷமும் கலந்த வார்த்தையை தூவினான். நாட்கள் ஆனது காத்திருந்த கண்கள் பூத்துப் போனது ஞானிகள் வந்த பாடில்லை ஏமாற்றம் ஒருபுறம், பதவி பறி போய் விடுமோ என்ற பயம் மறுபுறம் என்று துடித்து எழுந்தான். மிகுந்த சீற்றம் கொண்டான். தாம் ஏற்கனவே கேட்டறிந்ததன் படி காலத்தைக் கணக்கிட்டு இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண் குழந்தைகளையும் கொலை செய்ய உத்தரவிட்டான். இந்நிலையில் எத்தனைக் குழந்தைகள் கொலை செய்யப்பட்டார்கள் என்பது குறித்து பல தகவல்கள் உள்ளன. கிரேக்க வழிபாட்டில் 14,000 சிறுவர்கள் எனவும், சீரிய வழிபாட்டில் 64 சிறுவர் எனவும் கூறப்படடுள்ளது. இன்று வெளிபாட்டு நூலின் படி 144,000 சிறுவர்கள் இரத்தம் சிந்தினார்கள் மத்திய காலங் -களில் குறிப்பிட்டார்கள்.

ஆகவே அன்று மட்டுமல்ல, இன்றைய காலப்பகுதிகளிலும் சிறுவர்கள் கொல்லப்படுகிறார்கள். எமது நாட்டின் பாரிய யுத்தத்தின் போது கொல்லப்பட்ட சிறுவர்கள் எத்தனை பேர், கயவர்களால் கற்பழிப்பு செய்யப்பட்ட பெண் குழந்தைகள் எத்தனை பேர். கருவிலேயே கொலை செய்பப்பட்ட குழந்தைகள் எத்தனை பேர். பிறந்த குழந்தைகள் கொலை செய்யப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு. என்று கணக்கிட்டால் அதற்கு அளவேயில்லை. அன்று மட்டும் ஏரோது இருக்கவில்லை.இன்றும் அவனைப்போல் பல ஏரோதுக்கள் நம்மிடையே இருக்கின்றார்கள்.

ஆகவே விபரம் அறியும் முன்பே மரணத்தை தழுவிய இக்குழந்தைகளை திருச்சபை மார்கழி 28ஆம் திகதி நினைவு கூர்கின்றது. காரணம் மறைக்காலத்தில் மடிந்த முதல் மொட்டுக்கள் இவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்காக மட்டும் இரத்தம் சிந்தவில்லை. கிறிஸ்துவுக்குப் பதிலாக தங்களது உயிரை இழந்திருக்கிறார்கள் ஆகவே குழந்தைகள் சமூக நரம்பின் உயிரோட்டம், விண்ணக வாழ்வில் வாசல், ஆறுதல் ஆவணம் என்பதை கருத்தில் கொள்வோம்.

# நீ இன்றி நிறைவு இல்லை

அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம்

குடும்பத்தை பலர் பற்பலவாறு விபரிக்கின்றனர். சமூகத்தின் ஓர் அலகாக பார்க்கின்றனர். உளவியளாளர் மாறிவருகின்ற சூழலுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் ஒரு திறந்த அமைப்பாக பார்க்கின்றனர். திருச்சபை ஒரு குடும்பத்தை ஒரு இல்லத் திருச்சபையாக நோக்குகின்றது. உலகிற்கு அங்கத்தவர்களை வாரி வழங்கும் ஒரு அமைப்பாகவும், அன்பினதும் உயிர்வாழ்வினதும் சரணாலயமாக நோக்குகின்றது. இறைவனின் கொடைகள் என பிள்ளைகளை வரவேற்று, அடிப்படையாக, சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் சிறந்த அங்கத்தவர்களை வழங்குவதன் மூலம் தனது பணியை ஒரு குடும்பம் செவ்வனே செய்கின்றது.

## திருக்குடும்பமே முன்னுதாரணம்

இந்நிலையில் வருங்கால திருச்சபையின் மறுமலர்ச்சி குடும்பத்தின் முழுப்புதுப்பித்தலிலே தங்கியுள்ளது. தம்பதியர்கள் கிறிஸ்துவுக்காக வாழும் உயிர்த்துடிப்புள்ள தம்பதியர்களாக மாற வேண்டும். குடும்பங்களைப் பற்றி சிந்திக்கும் வேளையிலே, எந்தவொரு நிலையிலும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு எடுத்துக்காட்டாக, முன்மாதிரிகையாக விளங்குவது திருக்குடும்பமே. எனவே, இந்த திருக்குடும்பம் எவ்வாறு என்றும் சமாதானத்திற்கு அடிப்படையாக, சமாதானத்தின் ஊற்றாக, விளக்குகின்றது. அதில் மாபெரும் கொடையாகிய இயேசு, சமாதான ஒட்டு மொத்தவடிவமாக எப்படித் திகழ்கின்றார் என்றும், இச்சமாதானத்தின் மனிதர் முழு வளர்ச்சி பெறுவதற்கு, அன்னை மரியாளும் தந்தை சூசையும் காரணிகளாக எப்படி திகழ்ந்தார்கள் என்றும் பார்ப்போம்.

## இறைசித்தமேற்ற அன்னை மரி

இச் சமாதானத்தின் இயேசு, உருவாகுவதற்கு அடிப்படைக் காரணியாய் அமைந்தது, அன்னை மரியாளும், சூசையப்பரும். அன்னையருக்கு எல்லாம் எடுத்துகாட்டாக விளங்கும் அன்னை மரியாள், தன் பிள்ளை சமாதானம் நிறைந்த பிள்ளையாய் இருப்பதற்கு பல வழிகளில் காரணமாக இருந்தார். அன்னை மரியாள் திருமணவாழ்விற்கு அழைப்பு பெற்றது அன்றைய சமுதாயம் வழமைக்கு முற்றிலும் வேறுபட்ட விதத்தில் அவளுடைய திருமண ஒழுங்குகள் நிறைவேறியது வித்தியாசமான, ஏன்? விசித்திரமான விதத்தில், அப்படியிருந்தும் அவற்றை இறைதிட்டமாக ஏற்றுக்கொள்கின்றார். உதார-ணமாக, இறை வார்த்தையை தன் வாழ்வாக்கி இந்த வார்த்தையை தன் உள்ளத்திலே என்றும் இருத்தி சிந்தித்துக்கொண்டு இருந்ததனால் தான் (லூக் 2:19) இறைதிட்டத்தை அவளால் உணர முடிந்தது. இந்த இறைத்திட்டத்திற்கு முழுமையாக தன்னை அர்ப்பணிக்க முடிந்தது. எவ்வளவிற்கு எவ்வளவு இறை வார்த்தையை தன் உள்ளத்திலே இருத்தி சிந்தித்து, இறை திட்டத்திற்கு ஒவ்வொரு சந்தர்ப்பதிலும் உடன்பாடு கொடுத்து தன்னை கையளித்தாரோ அவ்வளவிற்குற்குத்தான் தனக்குள்ளும், தன் குடும்பத்திலும், சமாதானத்தை அனுபவித்தார்.

## அர்ப்பணத்தின் மறுபெயர் சூசை :

புனித சூசையப்பரைப் பற்றிப் பார்க்கும்பொழுது, தந்தையாக இருப்பதற்கு சூசையப்பருக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு, அன்றைய சமுதாய நிலையில் இருந்து மிகவும் வேறுபட்டது. மரியாளுடன் கூடி வாழுமுன் அவள் கருத்தரித்திருந்தாள். அதனால் ஏற்படுகின்ற சந்தேகங்கள்! ஆனால் இது கடவுளின் திட்டமென்று




தெளிவுடுத்தப்பட்டவுடன் அத்திட்டத்திற்கு முழுமையாக தன்னை அர்ப்பணிக்கிறார். குழந்தை இயேசுவின் உயிருக்கு ஆபத்து என்று அறிவிக்கப்பட்டவுடனே, அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற தொலைவிடத்திற்கு கொண்டு ஓடிச் சென்றார். இவ்வாறு, இறைவனுடைய திட்டத்திற்கு தன்னை முழுவதும் கையளிப்பதனாலே, தனக்குள்ளும் தன் குடும்பத்திலும் இறைவன் கொடுக்கின்ற சமாதானத்தை அனுபவித்தார். கற்பாறையில் அமைந்த இல்ல(ற)ம் : மேற்சொன்ன வழிகளாலும், இன்னும் பல்வேறு வழிகளாலும், அன்னை மரியாளும், சூசையப்பரும், இணைந்த திருக்குடும்பம் சமாதானத்தால் நிறைந்து, சமாதானத்தின் ஊற்றாக இருப்பதற்கு காரணமாக இருக்கின்றார்கள். ஒட்டுமொத்தமாக பார்க்கும்பொழுது, திருக்குடும்பத்தின் மூன்று அங்கத்தவர்களுமே அவரவர் வாழ்விலே எதிர்காலம் தெளிவில்லாமல், இனம்புரியாததாக இருக்கின்ற நேரத்திலும் இறைவனுடைய திட்டத்திற்குத் தம்மை முற்றாகக் கையளித்தார்கள். அவர்கள் இறை வார்த்தையிலே தம் வாழ்வை அமைக்க வைத்தது. மத்தேயு 7:14 இல் சொல்லப்படுவதுபோல், கற்பாறை மீது தங்கள் வீட்டை கட்டியவர்களாக இருந்தார்கள். இது தான் அவர்கள் சமாதானத்தை அனுபவிக்க ஊற்றாக அமைந்தது. இத்திருக் குடும்பத்திலே ஒவ்வொரு உறுப்பினரும் தத்தம் அழைத்தலுக்கும் நிலைக்கும் ஏற்ப சமாதானத்தை அனுபவித்து சமாதானத்தின் தூதுவ -ர்களாக இருந்தார்கள்.

## கனியாக இயேசு

அவர்களுடைய குடும்பத்தில் ஏற்பட்ட கஷ்ரங்களில், உதாரணமாக கன்னிப்பெண் வீதியோரத்திலே தன் ஒரே மகனைப் பிரசவித்த நேரத்திலே, பாலகன், இயேசுவை எகிப்துக்கு கொண்டு ஓடிய நேரத்தில், ஒருவருக்கொருவர் பிரமாணிக்கத்துடனும், ஒருவர் மட்டில் ஒருவர் பொறுப்புணர்வுடனும் இருந்தார்கள். இன்னும் அன்னை மரியாளினதும் சூசையப்பரினதும், வாழ்விலே இருந்த ஆழமான இறையுறவு, ஆலயம் செல்லும் பழக்கம், திருச்சட்டத்தை நிறைவேற்றும் ஆவல் இவைதான் இயேசுவின் ஆளுமை வளர்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுத்தன. இந்த களத்திலே தான் லூக் 3:52இல் கூறப்படுவதுபோல இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.

15 தொடர்ச்சி – பக்கம்




# நற்செய்தி அறிவிப்புக்கு இணையத்தளம் இன்றியமையாதது எனினும் அதுமட்டும் போதாது



நற்செய்தி அறிவிப்புக்குத் தொழில் நுட்ப திறமைகள் முக்கியமானவையாக இருந்தபோதிலும், உண்மையான மனித உறவுகளும் நம் ஆண்டவரோடு ஆள் - ஆள் உறவும் இன்றியமையாதவை என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். திருப்பீட பொதுநிலையினர் அவை நடத்திய 26வது ஆண்டு கூட்டத்தில் கலந்துகொண்ட 80 பிரதி நிதிகளை வத்திக்கான் கொன்சிஸ்ட்ரி அறையில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் நற்செய்தி அறிவிப்புக்கு தொழில் நுட்ப திறமைகள் மட்டும் போதாது என்று தெரிவித்தார்.

"டிஜிட்டல் உலகில் கிறிஸ்துவை அறிவித்தல்" என்ற தலைப்பில் மூன்று நாட்கள் கூட்டம் நடத்திய பிரதிநிதிகளுக்கு உரையாற்றிய திருத்தந்தை மக்கள் மத்தியில், இளையோர் மத்தியில் நற்செய்தி பாங்குடன் திருச்சபை செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். இணையத்தளத்தை வாழ்வின் இயல்பான அங்கமாக மாற்றியுள்ள இளையோர் மத்தியில் வாழ்வு பற்றி எழும் கட்டுக்கடங்காத கேள்விகளுக்கு பதில் சொல்வதாயும் இதற்கு பதில் சொல்லும், மனுவுரு எடுத்த கருணை நிறை ஆண்டவர் இயேசுவிடம் செல்ல வழியைக் காட்டுவதாயும் நற்செய்தி அறிவிப்பு அமைய வேண்டும் எனவும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ். இணையத்தளம் முன்வைக்கும் வாய்ப்புக்கள் மற்றும் ஆபத்துக்கள் மத்தியில் நாம் அனைத்தையும் பரிசீலனை செய்ய வேண்டும், மகிமை நிறை ஆண்டவரை சந்திப்பதற்கு மக்கள் இட்டுச் செல்லும் நல்ல வாய்ப்புக்களையும் தூய ஆவியின் துணையுடன் தேட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# கிறிஸ்மஸ் ஸ்பெஷல் மீன் பிரியாணி



பிரியாணி வகைகள் எல்லோரும் பிரியமுடன் சாப்பிடக் கூடியது. மீன் மனித உடலுக்கு அவசியமான ஒமேகா 3 போன்ற அத்தியாவசிய சத்துக்கள் நிறைந்தது அத்துடன் மீன் பிரியாணி சமைக்க எளிதானது. சுவையிலும் சூப்பர் என்று சொல்ல வைக்கக் கூடியது. அதை செய்து ருசித்துப் பாருங்கள்.

மீன் 1/4 கிலோ
அரிசி 2 ஆழாக்கு
வெங்காயம் 150 கிராம்
தக்காளி 150 கிராம்
இஞ்சி, பூண்டு விழுது 2 டீன்பூன்
புதினா, கொத்தமல்லி இலை 1/4 கட்டு
மிளகாய்த்தூள் 1 டிஸ்பூன்
கொத்தமல்லித் தூள் 1 டிஸ்பூன்
தயிர் 1 கப்
உப்பு தேவையான அளவு
எண்ணெய் 1/2 குழிக் கரண்டி

## செய்முறை

மீனை சுத்தம் செய்து துண்டுகளாக்கவும் வெங்காயம், தக்காளியை பொடியாக நறுக்கவும், மிளகாயைக் கீறிக்கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரம் அல்லது குக்கரில் என்னை ஊற்றி காய்ந்ததும் பட்டை, சேர்த்து தாளிக்கவும்.

- வெங்காயம், இஞ்சி, பூண்டு விழுது தக்காளி புதினா கொத்தமல்லி இலை இவற்றை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து வதக்கவும்.
- தயிர் மற்றும் போதுமான அளவு உப்பு சேர்த்து மீனை வதக்கவும். தொடர்ந்து மிளகாய்த்தூள், தனிதாயத்தூள், மஞ்சள் சேர்க்கவும்.
- பாசுமதி அரிசி ஒன்றை பங்கும், சாதா, 2 பங்கும் சேர்த்து வேக வைக்கவும். பாத்திரத்தில் "தம்" தேர்த்து ஆவி போகாமல் வைத்து) சிறிது நேரத்தில் இறக்கவும்.
- குக்கரில் ஒரு விசில் வந்ததும், குறைந்த தீயில் வைத்திருந்து அடுப்பை அனைத்து விடவும்.
- சுவையான மீன் பிரியாணி மணமணக்க ரெடி.



# கிறிஸ்மஸ் தினத்தன்று பரிமாற ஸ்பெஷல் சாக்லெட் கேக்



மைதா 2 கப்
சர்க்கரை 2 கப்
முட்டை 8
வெண்ணை 450 கிராம்
வெண்ணிலா பவுடர் 2 தேக்கரண்டி
பேக்கிங் பவுடர் 2 தேக்கரண்டி
கருப்பு டேப்லெட் சொக்லேட் 400 கிராம்

## செய்முறை

✳ சர்க்கரையை மீக்ஸியில் போட்டு அரைத்துக் கொள்ளவும்.
✳ சர்க்கரையை வெண்ணெயுடன் நன்கு க்ரீம் போல் வரும்வரை கலக்கவும்.
✳ சொக்லேட்டு துண்டுகளை சுரு நீரில் போட்டு நன்கு கூழ் போல செய்து கொள்ளுங்கள்.
✳ ஒரு பாத்திரத்தில் முட்டைகளை உடைத்து ஊற்றி, ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து நுரை வரும் வரை அடித்துக் கலக்கவும். கலக்கிய முட்டையில் வெண்ணை, சர்க்கரை கலவையை கொட்டி கலக்கவும்.
✳ அதில் பேக்கிங் பவுடர், வென்னிலா பவுடர் சேர்த்து மேலும் கலக்கவும்.
✳ சொக்லேட் கூழை முட்டை, சர்க்கரை, வெண்ணை கலவையில் ஊற்றி தொடர்ந்து அடித்துக் கலக்கவும்.
✳ பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மைதாவை சேர்த்து நன்கு கலக்கவும்.
✳ ஒரு வாய் அகன்ற பாத்திரத்தில் வெண்ணை தடவி அதில் இந்த மாவு, முட்டை கலவையைக் கொட்டவும்.
✳ வேண்டுமென்றால் அதன் மீது முந்திரி அல்லது பாதாம் துருவல்களைத் தூவி அலங்கரித்துக் கொள்ளலாம்.
✳ கேக்கை நன்கு வேக வைக்கவும். சுமார் 35 நிமிடங்கள் வேகவிடவும். கேக் வெந்தவுடன் உங்களுக்குத் தேவையான அளவுகளில் வெட்டி வைத்துக் கொள்ளவும். அசத்துங்கள்

# நன்றி நவிலல்



திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி. பெனடிக்ரா பஸ்ரியாம்பிள்ளை அவர்கள் 1933ம் ஆண்டு ஆடி மாதம் 27ந் திகதி திரு திருமதி பஸ்ரியாம்பிள்ளை நேசம்மா தம்பதியினருக்கு மூத்த புதல்வியாக யாழ் மண்ணில் பிறந்தார். இவர் திரு சூசையா(செல்வம்), திருமதி இராஜேஸ்வரி லீயோன் (மலர்) ஆகியோரின் அருமை சகோதரியுமாவார். இவர் தனது ஆரம்ப, உயர்தர கல்வியை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கற்று ஆசிரியராகப் பயிற்சி பெற்று ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியராக யாழ் புனித பத்தரிசியார் கல்லூரியில் பணியாற்றினார். இவ்வேளையில் தான் இறையழைத்தலை தன் வாழ்வில் உணர்ந்து 1950ம் ஆண்டு யாழ் திருச்சிலுவைக் கன்னியர் மடத்தில் ஒரு துறவியாக வர விரும்பிக் காலடி பதித்தார். பின்னர் சுவிற்சலாந்தில் தனது துறவறப் பயிற்சியை முடித்து ஒரு இளம் துறவியாக 1968ம் ஆண்டு இலங்கை திரும்பினார். இலங்கையில் இவர் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் பம்பலப்பிட்டி (கொழும்பு) ஆசிரியராகப் பணியாற்றியதுடன் 1988-1989 களில் கொழும்பில் கிறீஸ்தவ பண்பாட்டு தமிழ் பேரவையின் தலைவியாகவும், கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் மறைக்கல்வி நடுநிலையத்தில் தமிழ்ப்பிரிவில் இணை இயக்குநராகவும் பணியாற்றினார். அத்துடன் ஏனைய மறைமாவட்டங்களுக்கும் சென்று மறையாசிரியர்களை ஊக்குவிக்கும் முகமாக மறையாசிரியர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்தினார். அது மட்டுமன்றி கொழும்பு பேர்ணாடா விடுதி, மோதரை சுவசேவன போன்ற இடங்களில் குழுமத் தலைவியாகவும், மாகாணத்தலைவியின் ஆலோசகராகவும் பணியாற்றினார். பின்னர் நுவரெலியா, சாந்திபுரம், பண்டாரவளை போன்ற இடங்களில் பாலர் பாடசாலைகளை நடாத்தியதுடன் பாலர் பாடசாலை ஆசிரியர்களை உருவாக்குவதிலும் முன்னின்று உழைத்தார். தனது 60வது வயதில் சிங்கள மொழியில் இறையியல் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. ஈற்றில் கடந்த மூன்று வருடங்களாக நோய் வாய்ப்பட்ட நிலையில் கொழும்பு மாகாணத்தலைவி இல்லத்தில் தங்கி இருந்த இவர் பிறந்த இடமான யாழ் மண்ணிற்கு மாற்றப்பட்டார். அங்கு தனது வாழ் நாளின் இறுதி நாட்களை இறையன்பிலும், இறைபராமரிப்பிலும் செலவழித்து, 2013ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ந் திகதி அமைதியாக இறையடி சேர்ந்தார்.

இந்த வேளையில் எமது அன்ராவின் ஆன்ம சாந்திக்காக வேண்டுவதுடன், அவரை நோய்வாய்ப்பட்ட காலங்களில் கருத்தூன்றிப் பராமரித்த எமது முன்னைய நாள் மாகாணத்தலைவி அருட்சகோதரி. இமாக்குலேற் ஜோசப் அவர்களுக்கும் அவருடைய ஆலோசகர்களுக்கும், தற்போதைய மகாணத்தலைவி அருட்சகோதரி. விக்ரறின் ஜேமிஸ் அவர்களுக்கும், அவருடைய ஆலோசகர்களுக்கும், குறிப்பாக எமது அன்ரா தனது இறுதி நாட்களைச் செலவழித்த யாழ் திருச்சிலுவைக் கன்னியர் மட குழுமத் தலைவி அருட்சகோதரி. சில்வியா அவர்களுக்கும், அருட்சகோதரி எமறிற்றா அவர்களுக்கும் ஏனைய ஒவ்வொரு திருச்சிலுவைக் கன்னியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அத்துடன் அன்ராவின் இறுதிச்சடங்கில் பங்கெடுத்து திருப்பலி நிறைவேற்றிய யாழ்.மறைமாவட்ட ஆயர் மேன்மை தங்கிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகைக்கும், அமல மரித்தியாகிகளின் யாழ் மாகாணத்தலைவர் அருட்பணி. போல் நட்சத்திரம் அவர்களுக்கும், சிறந்த மறையுரையாற்றிய அருட்பணி. ஜெபரெட்ணம் அவர்களுக்கும் ஏனைய குருக்கள் துறவிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது ஆறாத்துயரில் எம்மைத் தேற்றிய உள்நாட்டு வெளிநாட்டு உறவுகள், உற்றார், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள் பல உரித்தாகுக.

**அன்ராவின் ஆன்மா சாந்தியடைய தொடர்ந்தும் இறைவனை வேண்டுகின்றோம்.**

**- நன்றி -**

**(மருமகள்)**

**அருட்சகோதரி. றெபேக்கா சூசையா**
**தி.சி.**
**(கொழும்பு)**




## 02ம் பக்கம் – குடிபெயர்ந்தோர் மற்றும்...

குடிபெயர்ந்தோர் மற்றும்

வெளிப்படையாக கூறப்படும் விடயங்களுக்கும் பொது அறிக்கைகளுக்கும் அப்பால் மறைந்த கசப்பான உண்மைக் கதைகளும் அவர்கள் படும் கஷ்டங்களும் மனிதாபிமானமற்ற முறையில் அவர்கள் நடாத்தப்படும் விதங்களும் பற்பல. கடந்த காலங்களில் மத்திய கிழக்கில் பல பணிப்பெண்கள் பாலியல் பலாத்காரங்களுக்கும் ஏன் மரணத்தையும் தமதாக்கிக் கொண்ட சம்பவங்களும் இடம்பெற்றன. இதில் சிலர் இலங்கையர்களுமாவர். ஒரு தேசமாக நாம் மாண்புடனும், மதிப்புடனும் வாழவும் குடியகல்வால் விசேடமாக குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் இடையூறுகள் பற்றி மக்களுக்கு அறியத்தரவும் கடமைப்பட்டுள்ளோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் இம்முறை தரப்பட்டுள்ள தொனிப்பொருளான "சிறந்ததொரு உலகத்தை நோக்கிய பயணத்தில் குடிபெயர்ந்தோர் மற்றும் அகதிகள்" என்று காலத்திற்கு ஏற்றதாய் அமைகிறது. குடியகல்வுகள் ஒரு நாட்டினதும், சர்வதேச குழுமத்தினதும் தோல்வியாக வெளிப்படுகிறது. மேலும் அவர்கள் ஒவ்வொரு மனிதனதும் மாண்பு மற்றும் தனித்துவம் பற்றிய ஆக்கப்பூர்வமான வேலைத்திட்டங்களை முன்வைக்க வேண்டும். பல பிரச்சினைகள் மற்றும் கஷ்டங்கள் மத்தியிலும் இடம் பெயர்ந்தோர் தமக்கும் தமது குடும்பத்திற்குமான சிறந்ததொரு எதிர்காலத்தையே எதிர்பார்த்து நிற்கின்றனர். மேலும் கத்தோலிக்க திருச்சபையின் சமூகப் படிப்பினைகள் மனித மாண்பையும் அவனது உன்னதத்தையும் பற்றியே எடுத்துரைக்கின்றன. மேலும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் "குடிபெயர்ந்தோரும் அகதிகளும் செஸ் விளையாட்டில் காணப்படும் காய்களைப் போன்றவர்கள் அல்ல" என்பதை ஆணித்தரமாக கூறுகிறார். வறுமை, துன்புறுத்தல்கள், நம்பிக்கையின்மை, புறந்தள்ளுதல், ஒதுக்கிவைத்தல் போன்றன மனிதர்களின் மனித மாண்பை குலைக்கும் செயல்களாகி இப்பூகோள மயமாக்கப்பட்ட உலகில் இவை அமைகின்றன வறியோர் மேலும் வறியோராகவும், பணம் படைத்தோர் அதிக பணம் படைத்தோராகவும் மாறுகின்றனர். பூகோளமயமாக்களின் உண்மையான நோக்கம் நல்லதொரு உலகமை அமைப்பதிலேயே அமைகிறது. ஆகவே நாடுகள் இந்த நோக்கத்தை அடைய ஒன்றுக்கொன்று உதவிட வேண்டும். சிறந்த மனித, சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளைத் தோற்றுவிக்க மக்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு அவசியமாகும். சிறந்த உலகைப் படைக்கும் நோக்கத்தை அடைய வேண்டுமெனில் முழுமையான மனித முன்னேற்றம் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறாயின் மனிதனது ஆன்மீக தேவைகளையும் பூர்த்தி செய்வதாய் அமைய வேண்டும். ஆகவே இடம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் மட்டில் எமது சிந்தனை மாற்றம் ஏற்பட வேண்டும். ஏனோதானோ என்ற கவனிப்பற்ற நிலையிலிருந்து அவர்களை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கும், உதவி செய்யும் நீதியின், சகோதரத்துவத்தின் கலாசாரத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

எகிப்து நோக்கிச் சென்ற திருக்குடும்பமும் இத்தகையதொரு அகதிகளின் நிலையை அனுபவித்தது எனலாம். மனிதன் கடவுளது சாயலிலும், பாவனையிலும் படைக்கப்பட்டுள்ளான். கடவுள் மனிதனானார். அவ்வாறு மனிதனான இயேசுவும் மரியாளும், சூசையப்பரும் எகிப்தில் தஞ்சம் புகுந்தனர். கடவுள் திருக்குடும்பத்தோடு என்றும் பயணிக்கின்றார். என்பதில் எவ்வித சந்தேகமும் அவர்களுக்கு ஏற்படவில்லை. இவ்வாறு இடம் பெயர்வையும் புதிய மறைபரப்புப் பணியின் ஓர் அம்சமாகக் காணும்படி பாப்பரசர் அழைப்பு விடுக்கிறார்.

இறுதியாக இலங்கைக்கும் உரித்தான இப்பிரச்சினை பற்றி நாம் தெளிவாய் புரிந்துகொள்ள வேண்டும். திருக்குடும்பம் அவர்களது இடம்பெயர்வில் கடவுளின் உடனிருப்பை கண்டுகொண்டனர். அதேபோல, இடம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கான இந்த விசேட நாளில் அவர்களுக்கு உதவிடவும், நேசக்கரம் நீட்டிடவும் முன்வருவோம். மேலும் நீதியும், சுயாதீனமும் நிறை சமுதாயத்தில் எல்லா மனிதரும் மாண்புடனும், மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டும் என்று செபிப்போம்.

## 13ம் பக்கம் – நீ இன்றி நிறைவு இல்லை

ஒரு பிள்ளை வளருவதற்கு இவ்வாறு களம் அமைத்துக்கொடுக்கும் பொறுப்பு குடும்பத்தைச் சார்ந்தது. இந்த இயேசுதான் சமாதானத்தின் கொடை. தந்தையிடம் இருந்து இந்த உலகிற்கு சமாதானத்தின் கொடையாக அனுப்பப்பட்ட இந்த இயேசுதான் உலகம் தரமுடியாத உண்மை சமாதானத்தை நான் உங்களுக்கு தருகின்றேன் (யோவான் 14:27) என்று கூறுகின்றார்.

இந்த இயேசு தனக்குள்ளே எவ்விதத்திலும் குறைவு படாத சமாதானத்தை அனுபவித்தார். இத்தகைய சமாதானத்தின் மனிதரைத்தான் ஆயிரம் ஆயிரம் மக்கள் ஆவலோடு தேடி ஓடினார்கள். ஆனால் மேலோட்டமாக உள்ளங்களைச் சாந்திப்படுத்தக்கூடி சமாதானத்தை அவர் அறிவிக்கவில்லை. உண்மைச் சமாதானத்தைப் பற்றி பேசும் இயேசு சமாதானத்தை அல்ல வாளையே கொண்டுவந்தேன் என்று தெளிவாக கூறுகின்றார். (மாற் 10:34) அதாவது பல்வேறு விதமான தீமைகள் அடக்கு முறைகள் நிறைந்த சமுதாயத்திலே சமாதானம் என்பது உண்மைக்கு குரல் கொடுத்து இறைவன் பக்கம் நிற்பதனாலேயே ஏற்படுகின்றது. இதனால் தான் உலகம் சமாதானத்திற்கான செய்தியை விடுத்த திருத்தந்தை 23ஆம் அருளப்பர் உண்மை, நீதி, அன்பு சுதந்திரம் என்பவற்றின் மேல் கட்டப்பட்ட சமாதானம், தீமை, பாவம் அடிமைத் தனங்கள் என்பனவற்றிற்கு சவால் விடுத்த சமாதானம். மனிதனை எல்லா நிலையிலும் இருந்து விடுவித்து உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கச் செய்த சமாதானம். இதனால் தான் இயேசு கொண்டுவந்த சமாதானத்தை, சமாதானத்தின் நகரம் அதாவது ஜெரு + ஷலோம் என்று அழைக்கப்படுகின்ற ஜெருசலேமிலே தன்னை முழுவதும் பலியாக்கித்தான், பெற்றுத்தந்தார். எவ்விதத்திலும் சவால் விடுக்க முடியாத சமாதானத்தின மனிதனாகிய இயேசு, தனக்குள்ளே நிறைவான சமாதானத்தை அனுபவித்தது மாத்திரமல்ல உலகம் தர முடியாத உண்மை சமாதானத்தை நான் உங்களுக்குத் தருகின்றேன் (அரு 14:27) என்று சொல்லும் சமாதானத்தின் கொடையாக திகழ்கின்றார்.

### இல்லத்திற்கு இன்றைய சவால்கள்

திருக்குடும்பம் சவாலை ஏற்றதுபோல இன்றைய ஒவ்வொரு குடும்பமும் பல்வேறு சவால்களை ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. ஆனால் திருக்குடும்பம் ஏற்றுக்கொண்ட சவால்கள் வேறு. இன்றைய நமது குடும்பங்கள் ஏற்கும் சவால்கள் வேறு. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தாலும், பூகோள மயமாக்கலினாலும் குடும்பத்தின் சமாதானம் இன்று பலவிதத்திலும் நிர்மூலமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு துறையும் குடும்பத்தின் சமாதானத்துக்கு நவீன சவால்களை விடுத்துக்கொண்டே இருக்கின்றது. உதாரணமாக ஊடகங்கள் நாட்டிலே மலிந்து வருகின்ற வன்முறைகள், போதைப் பொருட்கள் இவைகளெல்லாம் குடும்ப சமாதானத்துக்குப் பெரும் சவாலாக அமைந்து பெரும் பெரும் முதலைகளுக்கு குடும்பங்களை இரையாக்குகின்றன.

### இல்லறம் இறையறமாக

குடும்பத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் தன்னுடைய ஆணவம், தன்னலம், என்பவற்றை உடைக்கும் பொழுதுதான் குடும்பத்தின் அங்கத்தவர் மத்தியிலே உண்மைச் சமாதனம் ஏற்படும். ஒவ்வொரு குடும்பமும் சமாதானத்தின் உறைவிடமாக, ஊற்றாக திகழும். குடும்பம் சமாதானத்தின் உறைவிடமாகவும், ஊற்றாகவும் இருக்கும்பொழுது அது நிச்சயமாக குடும்பங்களிடையேயும் சமூகத்திற்குள்ளும் பரவும். இனிக்காத தேனில்லை. மணம் பரப்பாத மலரில்லை. ஒளி கொடுக்காத விளக்கில்லை. எந்த மதிப்பீடும் எந்த நன்மைத்தனமும் தன்னிலே வெளிநோக்குக் கொண்டது. இது போன்றுதான் சமாதானம் நிறைந்த குடும்பமும், குடும்ப உறுப்பினரும் என்றும் வெளிநோக்குக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும், சாந்தியின் கருவியாக, பகையுள்ள இடத்தில் அன்பையும், மனவருத்தமுள்ள இடத்தில் மன்னிப்பையும் கொடுக்கின்றவர்களாக.. ஆறுதலுக்கா அலைவதை விடுத்து ஆறுதலைக் கொடுக்கின்றவர்களாக.. இருக்கின்றார்கள். இவ்வாறுதான் குடும்பங்களின் ஊடாக சமாதானம் பரவமுடியும். எனவே திருச்சபையின் மறுமலர்ச்சியை விரும்பும் நாம் ஒவ்வொரு குடும்பத்தையும், எமது குழுமம், பங்கு, தலத்திருச்சபை என்னும் குடும்பங்களையும் புதுப்பிப்போம். குடும்பம் சமாதானத்தின் உறைவிடமும் ஊற்றுமாக திகழுவதற்கு எதிராக வரும் சவால்களை, அழிவு சக்திகளை இனங்காண்போம். அதேவேளை இச் சமாதானத்தை உருவாக்கும், வளர்க்கும் ஆக்கபூர்வ அம்சங்களையும் இனங்கண்டு ஒவ்வொரு குடும்பத்தையும் சமாதானத்தின் உறைவிடமாகவும் ஊற்றாகவும் மாற்றுவோம். வளர்ப்போம்.

## 07ம் பக்கம் – ஞாயிறு சிந்தனை

புத்தம் புதிய இந்நன்னாளிலே எம் நாட்டிற்காக மன்றாடுவோம். எமது நாட்டையும் நாட்டின் தலைவர்களையும் நிறைவாக ஆசீர்வதிக்கவும், இயேசுவின் தலைமைத்துவப் பண்புகளை பின்பற்றி தலைமையேற்றோர் செயல்படவும் பொருளாதார வளர்ச்சி கண்டு நாடு முன்னேறவும், சமதர்ம சமுதாய வாழ்வு எங்கு மலரவும், உமது ஆசீரைப் பொழிந்தருள, வேண்டுமென்று தந்தையே....

அன்னை மரி வழியாக எம் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். மரியன்னையின் ஆண்டைத் தொடங்கியுள்ள நாம் இந்த வருடத்தில் எல்லா நாட்களிலும் அன்னையின் வழியை பின்பற்றி வாழவும், எல்லா மக்களையும் அன்னையைப் போல் அன்பு செய்யவும் ஏழை எளியவரை நேசித்து எம்மிடம் உள்ளதை பகிர்ந்து கொள்ளவும், நோய் துன்பம் வறுமையினால் அவதிப்படுவோருக்கு ஆறுதல் வழங்கவும், எல்லாக் குடும்பங்கள் மீதும் உமது ஆசீரைப் பொழிந்தருள வேண்டுமென்று...

## 03ம் பக்கம் – கிறிஸ்மஸ்

வாழ்வுச் சூழல் நாம் எதிர்பார்ப்பது போன்று என்று சுமூகமாயிருப்பதில்லை. மரியா, சூசையப்பர், இடையர்களின் வாழ்வு போன்று மேடுபள்ளங்கள், முரண்பாடுகள், சவால்கள் நிறைந்தவை. இச் சூழ்நிலைகளில் மனித அவ நம்பிக்கையிலிருந்து இறை நம்பிக்கைக்குப் பயணிக்கும் ஒவ்வொரு முறையும் எமது வாழ்வில் கிறிஸ்மஸ் இடம்பெறுகிறது. மனிதன் தனது அவ நம்பிக்கையின் அடித்தளத்திற்குச் செல்லும்போதுதான் இறைவன் வந்து நம்மைக் கைதூக்குகின்றார். ஏனென்றால், இறைவன்தாமே நம்மைக் கைத்தூக்கினார் என்பதை நாம் உள்ளூர உணர வேண்டும் என்பதற்காக.

### "எருசலேம் – ஜெருஷலோம்" சமாதானத்தின் நகரம்

பெத்தலகெமில் இயேசுவுடன் ஆரம்பிக்கும் பயணம் சமாதானத்தின் நகரம் எனப்படும் ஜெருசலேம்வரை செல்லும்போதுதான் இச்சமாதானம் நடைமுறை வாழ்வில் நாமனுபவிக்கும் சமாதானமாக, முதிர்ச்சி பெற்று சமாதானமாக, தியாகம் எனும் மரத்தில் மலரும் சமாதானமாக, அமையும். இயேசு தனது பாடுகள், மரணம், உயிர்ப்பின் மூலமாகத்தான் - அதாவது தன்னையே முழுமையாக பலியாக்கியதன் மூலம்தான் எமக்கு முழுமையான சமாதானத்தை, புதுவாழ்வை பெற்றுத் தந்தார். பணம், பொருளைவிட மனிதனை நமது உள்ளத்தின் அடி ஆழத்தின் பெரிதாக மதிக்கும்போது. அண்ணார்ந்து பார்க்க நாம் ஆசைப்படும் இறைவன். "கடவுள் நம்மோடு" (இம்மனுவேல்) என்று உறுதியாக உணரும்போது, "அவர் செல்வமிக்கவராய் இருந்தும்... உங்களுக்காக ஏழையானார்" ( 2 கொரி 8:9) என்பதை அறியும்போது, நம்பிக்கை என்னும் விளக்கு துன்பப் புயலில் அணைந்துபோகும் வேளைகளில் நமது இரவுகளை ஒளிர்விக்கும் சுடர்விளக்காக இயேசு வருகிறார் என்று நம்பும்போது, பாலன் குடிலின்முன் கண்ணீர் சொரியும் எமது கண்கள் குடிசையிலுள்ள ஏழைகள், நோயிற்றோரையும், முகாம்களில் முடக்கப்பட்டோரையும் கண்டு நெஞ்சம் நெகிழும்போது, அங்குள்ள குடிசைகளின் குட்டையான வாசகல்களினூடாக தலைகுனிந்து செல்லும்போது, ஏதிலிகளாய் ஆக்கப்பட்ட உலகமெங்குமுள்ள எண்ணிலடங்கா மக்களோடு எமக்குள்ளதைப் பகிர்ந்து வாழும்போது, மற்றவர்களோடு நாம் கொண்டுள்ள அன்பும் உறவும் கபடற்ற, தூய்மையை தியாகம் நிறைந்த அன்பாக மலரும்போது, வளரும்போது, இயேசு நமது உள்ளங்களில் பிறக்கிறார் - நமக்கு இதுவே கிறிஸ்மஸ்.

இயேசுவின் பிறப்பு அனைத்து மனிதர்களும் வாழ்வில் ஈடுபாடு கொள்வதற்கு விடுக்கும் அன்பின் அழைப்பு. அன்று இடம்பெற்ற வரலாற்று நிகழ்வை இன்று நாம் நமது வாழ்வாக்க விடுக்கும் அழைப்பு. கடவுளின் மனித வருகை, மனிதனை இறைவனாக்க மட்டுமன்று, அவனை முழு, புது மனிதனாக்கவும் தான். கிறிஸ்மஸ் இறைவனின் அண்மையை எமக்கு உணர்த்தும் விழா. இறைவனின் அண்மையை, அந்த உண்மை உணர்த்தும், தூய்மை, அன்பு, நம்பிக்கை, உண்மை, நீதி, சமாதானம் என்பவற்றை இன்று மனிதர் ஒவ்வொருவரும் தம் வாழ்வில் மெய்மையாக்க நம் ஒவ்வொருவருக்கும் விடுக்கப்படும் சவால்கள் நிறைந்த அழைப்பு. இவ்வாறான அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடவே பாலகன் இயேசு நம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார்.

"A wise man which built a house and digged deep, and laid the foundation on a rock" (Luke 6:48-49)



Experts in building and renovations
To start a new house.
To modify the old house
To complete the half built house
Start today, Call now.
NILE HOMES
And Constructions - Kadawatha
0777-796838 / 072-7796838
E-mail: nilehomes@yahoo.com
www.nilehomes.lk
(N4869) (N3212)



இலங்கையில் முதன்முறையாக
இலங்கை கிளரீசிய குருக்களால் முதன் முதலாக வெளியிடப்படும்
விவிலிய நாட்குறிப்பேடு – 2014
இப்போது வெளிவந்து விட்டது



- முதலாம், இரண்டாம், நற்செய்தி வாசகங்கள்
- வாசகங்களுக்கு பொருத்தமான சிந்தனைகள்
- இலங்கை கிளரீசிய குருக்களால் எழுதப்பட்ட வாசக சிந்தனைகள்
- பதிலுரைப்பாடல்
- புனிதர்களின் திருநாட்கள்
- குறிப்புகளை பதிவு செய்வதற்கான இடைவெளி
- இலங்கையின் திருவழிபாட்டு ஆண்டிற்கமைய அமைக்கப்பட்டது
- அனைவரும் வாசிக்கக் கூடிய வகையில் அமைந்த எழுத்துருவாக்கம்
- தரமான தாள்களில் அச்சிடப்பட்டது

இவ்வாறான அனைத்து அரிய விடயங்களை உள்ளடக்கிய இவ்விவிலிய நாட்குறிப்பேட்டை இன்றே நீங்களும் பெற்று பயனடையுங்கள்
பிறக்கப்போகும் 2014ஆம் ஆண்டுக்கு இறைவார்த்தையை பரிசளிப்போம்
உங்களுக்கான பிரதிகளைப் நாடெங்கிலும் உள்ள எமது விற்பனைப் பிரதிநிதிகளிடம் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
தொடர்புகளுக்கு :-
கிளரீசியன் வெளியீட்டகம்
இல 55, இறாகமை வீதி,
வெலிசர
011 2 953 434
077 8 032 348
(N5013)

சிறு நீரகம் தேவை

A அல்லது O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் ஒன்றை தானம் செய்யக் கூடியவர் உடனடியாகத் தேவை.

தயவு செய்து அழையுங்கள்
077 2948252
(N4995)

## உரோமை உர்பானிய பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் கொழும்பு அருளாளர் யோசேவ் வாஸ் தமிழ் இறையியல் கல்லூரியினால் தற்பொழுது உங்களுக்கும்...

# டிப்ளோமாவும் பட்டப்படிப்பும்





## நீங்கள்

### கத்தோலிக்கராயின்...

வயது 18 இற்கு மேற்பட்டவராகவும், 50 இற்கு குறைந்தவராகவும் இருப்பின்...கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவராயின் ... இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்.

### டிப்ளோமா

- ☆ க.பொ.த (சா/த) அல்லது மறையாசிரியர் இரண்டாம் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (3வருடம்)

### பட்டப்படிப்பு

- ☆ க.பொ. த (சா/த) பரீட்சையில் (தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட சித்தியடைந்திருத்தல்)
- ☆ க.பொ.த (உ/த) பரீட்சையில் (3 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்)
- ☆ அருளாளர் யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியின் டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல் (4வருடம்)

### சான்றிதழ்

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகள் இல்லாதவர்களும், மறையியலில் ஆழமான அறிவினைப் பெற்றுக் கொள்ள விரும்பின் கற்கை நெறியில் முற்று முழுதாக கலந்து கொண்டு சான்றிதழ் பெறும் வாய்ப்பும் உண்டு.

## எங்கள் இலக்கு

1. பொதுநிலை, துறவற கத்தோலிக்கருக்கு, கத்தோலிக்க திருமறையினை தமிழ்மொழியில் ஆழமாக பயிலுவதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கல்.
2. இதன் வழி அவர்களை விசுவாசத்தில் உறுதி பெறச்செய்தல்.
3. அவர்கள் ஆழமான அறிவினைப் பெறவும், மறைபரப்புப் பணியில் ஆர்வம் கொள்ளவும் செய்தல்.
4. மூன்று வருட பாடநெறியில் சித்தியெய்தியவர்களுக்கு 'டிப்ளோமா" சான்றிதழ் வழங்கல்.
5. டிப்ளோமா சான்றிதழ், மற்றும் நான்கு வருட பட்டப்படிப்பில் சித்தியெய்தியவர்களுக்கு உரோமை உர்பானிய பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற கிறிஸ்தவ கற்கைநெறி தொடர்பான கலைமானி பட்டத்தை வழங்கல்.

### நேர்முகப் பரீட்சை விபரம்

திகதி : 28 - 12 - 2013
நேரம் : பி.ப 4.00மணி முதல் 6.30மணி வரை
இடம் : கொழும்பு அக்குவைனஸ் கல்லூரி தமிழ் இறையியல் விரிவுரை மண்டபம்

### விரிவுரை விபரம்

நாள் : திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி தினங்களில்
நேரம்: பி.ப 3.30மணி தொடக்கம் பி.ப 5.30மணி வரை
இடம் : கொழும்பு அக்குவைனஸ் கல்லூரி தமிழ் இறையியல் விரிவுரை மண்டபம்

கட்டணம்: அனுமதிக் கட்டணம் - 300/=
மாத கட்டணம் - 300/= அல்லது
ஆறு மாத காலத்திற்கு - 1500/=

அனுமதிப்பத்திரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

- ☆ அருட்தந்தை றெஜினோல்ட் லூசியன் (OMI)
  தொலைபேசி : 011 – 2677511,
  : 071 – 8299151
- ☆ திருவாளர் த. இரங்கநாயகம்
  தொலைபேசி : 077 – 9232497
- ☆ பங்குத் தந்தையர்கள்



## வாருங்கள், சேருங்கள் மறைபரப்பாளராக மாறிடுங்கள்

---

# அமல மரியின் துணையுடன்
# 19வது வருடாந்தத் திருவிழா

## புனித சூசையப்பர் ஆலயம் ~ பயாகல



### ஜனவரி மாதம் 12 ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறும்

**ஜனவரி மாதம் 09,10,11 ஆகிய திகதிகளில் இரவு 07.00 மணிக்கு நவநாளும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்**

**ஜனவரி மாதம் 12ஆம் திகதி - இரவு 7.30 மணிக்கு மாலை ஆராதனை**

## ஜனவரி 13 – திருவிழா நிகழ்ச்சி நிரல்



★ காலை 6.30 மணிக்கு - திருப்பலி

**காலை 8.00 மணிக்கு திருவிழா திருப்பலி**

*அருட்பணி. ஜோன் கெமிலஸ் [அ.ம.தி] அடிகளாரின் தலைமையில்*

★ [சிறுவர்களை ஆசீர்வதித்தல்]

★ பவனி மற்றும் அன்னதானம்
காலை 11.30 மணிக்கு திருப்பலி – தமிழ்
மாலை 5.00 திருப்பலி [கால தாமதமாக வரும் விசுவாசிகளுக்காக]

*பங்குத்தந்தை அருட்பணி. சிசிர சமரகோன் அடிகளார் மற்றும் பங்கு மக்கள்*

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை பீ.சீ.ஜீ எட்ரிச் றொட்ரிக்கோ, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்